ஓம் விநாயக நம:




# சந்திர தீபம்



## சைவநீதி வளர்த்திடும் தமிழ்ப் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

UNIVERSITY OF JAFFNA CAMPUS
RECEIVED
1981-1-20
PERIODICALS DIVISION
LIBRARY




வெள்ளிக்கிழமை [4-10-80]

ரௌத்திரி வருஷம் புரட்டாதி மாதம் 17-ம் நாள்

இதழ்: 4 சுடர்; 2

கொடியவைபற்றிக் கூறும் மலர்



### சைவமக்கள் யாருடனும் பகையிலாத பகைபாராட்டாதிருக்கவேண்டும்

### சைவனது உள்ளத் தூய்மையில் பகை இல்லை! கொடுமையில்லை!! குரோதமில்லை!!!

### பகையிலாத தொண்டுதான் பெரியோரது வழி

# கோயில்பேரில் பகை கொடிதிற் கொடிது!!!!

கோயில்சென்று கும்பிடுவதிலும் மனிதன் நல்ல செயல்களைக் கடைப்பிடித்து ஒழுகும்போது தெய்வம் தோன்றாத் துணையாகநின்று பல அல்லல்களிலும் பாதுகாக்கும் என்பதை கீழ்வருமாறு திருநாவுக்கரசர்பெருமான் கீழே தரப்படும் தேவாரமூலம் தெரிவிக்கின்றார்.

நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகளைப் பெரியபுராணமூலம் தெரிவதன்றி நாயன்மார்களது தேவாரப் பதிகங்கள்மூலம் அவரது வாழ்வையும் கொள்கைகளையும் தெரிவதே முறையாகும். பெரும்பாலாக நாயன்மார்களது தேவாரப் பதிகங்கள்மூலம் அவரது வாழ்வையும் கொள்கைகளையும் அவர் கடைப்பிடித்த சீலங்கள்பற்றியும் நாம் நோக்கும்போது பெரிய புராணம் மிகவும் சிறுமைப்பட்டதாகப் பல ஒவ்வாத சரித்திரங்களைக் கொண்டதாகக் காணப்படுகிறது.

கீழேதரப்படும் தேவாரத்தில் ஒரு சைவன் அல்லது உண்மைதெளிந்த சிவனடியார் எப்படி இருப்பார்? அவர் கொள்கை எப்படி இருக்கும்? அவர் சிந்தை எவ்வாறு தொழிற்படும்? அவரின் உறவினர் யார்? பகைவர் யார்? அவர் இந்த உலகில் யாரை மதிப்பார்? யாரை வெறுப்பார்? யாருக்குப் பணிவார்? யாதிற்கு அஞ்சுவார்? என்றதெல்லாம் தெளிவுபட அத்தேவாரத்தில் காணலாகும்.

இந்த உலகில் இன்றைய எமது இளைஞர் சமுதாயம் இதை நன்கு வாசித்து நன்கு சிந்தித்துத் தெளிய வேண்டும்? சைவம் என்றால் கோயில் போதல் கும்பிடுதல் கொடியேற்றல் திருவிழாச் செய்தல் பிரசங்கம் செய்தல் இவைதானே? அல்லது வாழ்க்கையிலும் நீதியுடன் வாழவேண்டியதோ? அல்லது எல்லாப் பழிகளையும் வீட்டில்செய்து கோயில்போய்க் கும்பிட்டுக் கற்பூரம் கொளுத்தி அருச்சனைபண்ணி கோபுரம்கட்டி கொண்டாட்டம் வைப்பதோ? அவைதான் சைவநெறியோ? என்பதை எமது இளம் சந்ததியினர் சிந்திக்கவேண்டும்.

ஆறுமுகநாவலர் எழுதிய சைவ விஞவிடையில் கோயிலில் செய்யத்தகாத குற்றம் என்று சில சொன்னார். ஆனால் மனிதர் யாரும் செய்யத்தகாத குற்றம்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை!

மனிதன் எவ்வாறுயவன்? அவன் உள்ளம் எப்படித் தொழில்படுகின்றது? அவன் ஒரு சைவனாகில் எப்படி இருக்கவேண்டும். கோயில்போய்க் கால்கழுவி அட்டாங்கம் பஞ்சாங்கமாகவிழுந்து கும்பிட்டு ஆறுமுகநாவலர் மரயில் கோயிலில் செய்த பிரசங்கத்தையும் கேட்டு வீடுவந்தால் பிணி தீருமா கவலை தீருமா கற்பு வழுவாதிருக்குமா சண்டை சச்சரவு நீங்குமா பகை நீங்குமா?

இந்த ஒருநிலையை எமது சைவ இளைஞர் சமுதாயம் நினைக்கவேண்டும்? சிந்தித்துத் தெளியவேண்டும். உண்மையில் கடவுள் அருளைப்பெற விரும்பினால் முதற்கண் எவருடனும் பகைப்பதை நீக்கினால்தான் அருளைப் பெறும் வழி அதுவாகும்!

இப்பொழுது மனிதனிடத்துப் பகை பெருகுவதற்குக் காரணம் யாது? இதைத் தெரிவிக்கவேண்டியது எமது கடமை! பகைக்கு அத்திவாரம் பொறாமை, இதை அழுக்காறு எனச் சொல்வர்! அழுக்கு சக ஆறு அழுக்காறு என வருகின்றது. சிந்தையில் உள்ள அழுக்கே ஆறாகப்பெருகுகின்றதால் அதற்கு அழுக்காறு எனப் பெயரிட்டனர்.

சிந்தையில் அழுக்கு என்பது யாது! பிறர் நலம் கண்டு சகித்திடாது வரும் நிலையே அழுக்கு எனப்படும்! ஒருவர் தான் செல்வந்தராக வரமுடியாதபடி தனது முயற்சியின்மை பழுதானவுடன் செல்வராய் உள்ளவரைப் பார்த்துச் சகித்திடாது அவரைப் புறங்கூற அல்லது பகைக்க முற்படுகிறார்.

அதேபோன்று செல்வந்தராய் வந்தவர் தமக்கு வசதிகள் பல பெருகிய உடன் வசதி அற்றாரைத் தமக்கு வேண்டாதவர் தம்முள் கூடிவாழத் தகுதி அற்றவர் எனத் தள்ளிவிடுகின்றார். அதனால் வாரியாருடன் இவர் பகைபாராட்டுபவராகவே ஆகின்றார்!

இந்த ஒருநிலையில் செல்வந்தர் வடிவாக உடுத்துப் பொன்பூண்டு வசதியான வாகனம் கிடைத்துவிட்டால் வழியால் செல்லும் ஒரு ஏழை தனக்குக் கட்டுப்பட்டவர் என நினைந்து அவரைப் பகையான மனதில் நோக்கி கட்டளையிடப் பார்க்கிறார்! ஏழை மறுத்தால் உடனே பகை கோபம் அடி எல்லாம் வருகின்றது. இது இன்று எமது தமிழினத்தில் எல்லா இடமும் பெருகிக்கொண்ட ஓர் பழியாகிவிட்டது.

ஆகவே இந்தப் பகை என்னும் பழி தமிழினத்தில் புகுந்து இன்று மனிதனை மனிதன் மதித்திடும் ஓர் நிலையை இல்லாமல் செய்துவிட்டது.

இந்த ஒரு ஏற்றத்தாழ்வு பொறாமையின் நிலையேயன்றி வேறில்லை. இதனையும் சிந்திப்போம். பொறாமை என்பது சிந்தையின் பொறுதியை இழத்தல் என்பதால் பொறாமை என்பதாயிற்று. ஆதலினால் பகைபாராட்டல் செய்வார் தமது மனதின் சாந்த நிலைக்குத் தாமே பகையாகின்றார் என்றதசல் பகையை ஒரு மனிதனுக்கு புறப்பகைபோல உட்பகையாகும் என அறிஞர் நிச்சயித்துள்ளனர்.

புறப்பகையும் ஒரு மனிதனுக்குத் தீமை வருவிப்பதுபோல் உள்ளத்தில் எழுவதாகிய கறுவியம் என்கின்ற பகையும் தனக்குத்தானே கேடுவிளைவிக்கின்றது. இதுமட்டுமன்றி இப்பகைக்குக் காரணமாக கோபம், ஆசை ஆகிய இவைகள் இரண்டும் அமைந்துவிடுகின்றன. உள்ளத்தினின்றும் பகையை அறவே ஒழிப்பவனை என்னும தெய்வம் காத்துவரும். ஆகவே இந்த விடயத்தில் சைவமக்களாகிய நீங்கள் அசைக்கமுடியாத நம்பிக்கையை வையுங்கள்.

கீழே தரப்படும் தேவாரத்தில் திருநாவுக்கரசர் யாருடனும் நாம் பகைபாராட்டுவதில்லை என்றதால் எதற்கும் அஞ்சமாட்டோம் யாருக்கும் கட்டுப்படமாட்டோம் என்று சொல்கின்றார்.

இந்தத் தேவாரத்திலே மிக மிக உயர்ந்த இலட்சியங்களைப் பற்றிச் சொல்லுகின்றார். எல்லாச் சமயத் தலைவர்களும் சொல்லுகின்ற அறங்களிலும் பார்க்க மிக மேலான அறத்தை இப்பாடல்மூலம் கூறி எல்லாச் சமயத் தலைவர்களுடைய போதனைகளையும் உச்சிவிடுகின்றார், அடுத்ததாக இத்தேவாரத்தில் உள்ள இன்னுமொரு சிறப்பையும் கூறுகிறோம். தாம் செய்யமுடியாதவற்றைத் திருநாவுக்கரசர் வெறும் போதனையாகச் சொல்லவில்லை. தான் செயலாற்றி வந்ததையே சொல்லியிருக்கின்றார்.

இப்பாடலில் இவர் சொல்லுகின்ற சீலங்கள்மூலம்தான் கடவுளை அடைய முடியும். கடவுள் என்றால் இலேசான காரியம் என்று நாம் கருதக்கூடாது. நாம் நினைத்தவுடன் எம்மிடம் வந்துவிடக்கூடியதுமன்று. ஆனால் நாம் கடைப்பிடித்துவரும் சீலங்கள்மூலம்தான் அவரை அணுகலாம் என்பதை இப்பாடல்கள்மூலம் நாம் தெரிந்துகொள்ளலாம். அப்பாடலில் ஒரு சைவனுக்குப் பணம் என்பது கருத்தாக இருக்கக்கூடாது. வாழ்க்கைக்கு வேண்டுவது மட்டுமேயன்றி மேற்கொண்டு சேமித்துவைப்பது சைவன் என்பவனுக்குத் தவறான வழியாகும். சேமிப்பு என்பது சைவனுக்கு வேண்டியதில்லை. அப்படியான வழியில்போனால் நிச்சயமாகத் திருவருள் நிலையினின்றும் நீங்கி பொருள் என்னும் பாசவலைக்குள் சிக்கிவிடுவீர்கள். பின்னர் எத்தனை கோயில்களைக் கும்பிட்டும் பலனில்லாது போய்விடும். இந்த நிலையில் சைவன் எனப்படுபவனுக்கு ஒரு துணிவு நிச்சயமாகவேண்டும். பொருளுக்கு நம் மனத்தை அடிமையாக்கக் கூடாது. இதுமட்டன்றிப் புகழுக்கும் நம் மனத்தை அடிமையாக்கிவிடக் கூடாது. அச்சம் கேடு பிணி இவை யாவும் பொருள் புகழ் ஆகிய இரண்டையும் விரும்பியவர்க்கு தானேவந்தடையும் நிச்சயமான கேடுவனவாகும். ஒரு சைவனுக்குப் பொருள் வேண்டுமென்றால் அது யாதிற்கெனில் பிறர்க்கு உதவும் பொருட்டாக எனில் அது வரவேற்கத்தக்கதாகும். இந்தத் துணிவைக் கீழேயுள்ள தேவாரத்தில் கண்டுகொள்ளலாம்.

நமனை அஞ்சோம், நாமார்க்கும் குடியல்லோம். பிணி அறியோம் யாரையும் பணிவோமல்லோம் என்றதெல்லாம் எப்படிவரும். இதனை எமது சைவ இளைஞர்களே சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். கடவுளைப் பற்றி நீவிர் மறந்துவிட்டாலும்கூட பற்றற்ற தூய நிலையில் வருகின்ற துணிவு அச்சத்தை கேட்டை துயரத்தை மரணத்தை அகற்றிவிடுகின்றது. ஆகவே சிவனை அடைதற்கு உற்றநெறியில் முதற்கண் எமக்கு உறுதி தருவது எவருடனுவது பகை பாராட்டாத ஒரு வாழ்க்கை. தம் மீது பகைபாராட்டுவார்மீதும் தாம் பகைகொள்ளாதிருப்பது நிச்சயமாக அந்த ஒருநிலை உள்ளத்தூய்மைக்கு ஒரு ஊன்றுகோலாக அமையும். இந்த உள்ளத்தூய்மை மூலம்தான் சிவனை அடையலாமேயன்றி வேறொன்றின்மூலமும் சிவனை அடையமுடியாதென்பதை நன்றாக நீங்கள் தெளியுங்கள். எத்தனை கோயில்கட்டி கும்பாபிஷேகம் செய்தாலும் உளம் தூய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைப்படாதிருந்தலே் இவற்ருல் ஒரு பிரயோசனமும் இல்லை. நீங்கள் செய்வதின் தொண்டுகளாய திருப்பணிமுதல் பலவும் உளத்தூய்மையை பகையற்ற நிலையை வருவிக்க வேண்டும். ஆதலினுல் தொண்டு மூலம் பெறப்பட்ட பகையற்ற உளம் கொண்டால் எம்மைத் துயரத்துள் ஆழ்த்த முற்படுவாராலும் துயரப்படுத்த முடியாதென்பதைச் செறுவாரும் செறமாட்டார், தீமை தானும் நன்மையாய்ச் சிறப்பது எனத் துணிந்து கூறுகின்ருர்.

தன்னைச் சிறைப்பிடித்துக்கொண்டு போவதற்காக வந்த அரசகாவலருக்கும் சேனுதிபதிகளுக்கும் முன்னுக நின்று உங்களால் என்னை யாதும் செய்யமுடியாது நீங்கள் எமக்குச் செய்ய எண்ணியுள்ள தீங்கானது எம்மைச் சேராது. ஏனெனில் எனது உள்ளத்தில் யார்மீதும்கொண்ட பகைமையின் தீய எண்ணம் ஒன்றும் இல்லை. யாம் யாரிடத்தும் பகை கொள்ளவில்லை என்பதை இருநிலத்து எமக்கு எதிராவார் யாருமில்லை எனக் கூறுகின்ருர்.

சைவ இளைஞர்களே இந்த ஒரு கருத்தை நிச்சயமாக நீங்கள் யாபேரும் உணர்ந்துகொள்ளல்வேண்டும். வேடிக்கையாக இதை நினைத்துச் சிரியாது மிக்க வினயமாக உங்கள் உள்ளத்தில் இக்கருத்தைப் பதியவையுங்கள்.

உங்கள் உள்ளத்தில் ஒருவருடனும் பகை காட்டமுடியாத உண்மைநிலை என்று ஏற்படுகின்றதோ அன்று உம்மை எவராலும் துயர்படுத்த முடியாதநிலை வந்துவிடும், இது சொல்லளவில் எளிதாகும். ஆனுல் செயலளவில் மிகு கடினம். திருநாவுக்கரசர் சொல்லளவில் மாத்திரம் சொல்லிவிடாது செயலளவிலும் செய்து காட்டியுள்ளார். திருநாவுக்கரசரின் சொல்லின் உண்மையை விளங்கிக் கொள்ளாத சேனுதிபதிகளும் மந்திரிமார்களும் சோழ அரசனும் சேர்ந்து சமணர்களின் கூற்றுப்படி நீற்றறையில் வைத்தார்கள். அவர் சாகவல்லை. நஞ்சினுலும் அவர் உயிரைப் போக்கடிக்க முடியவில்லை. யானையை விட்டு அவரின் தலையை இடறப் பண்ணி அவரின் தலையைத் துண்டாடிச் சாகடிக்கப் பார்த்தார்கள் — சாகடிக்கமுடியவில்லை. கல்லில் கட்டிக் கடலில் போட்டார்கள். அவர் சாகவில்லை. எனவே இந்த உண்மையை உள்ளத்தில் உறுதியுடன் கடைப்பிடியுங்கள். எந்த உயிர்மீதும் பகை பாராட்டாதவனுக்கு பிறப்பு இறப்பு என்ற இரண்டும் இல்லை.

ஆகவே சென்ற சுடரில் நாம் சொல்லிய எண்வகைச் சீலங்களில் முதலாவதாகிய அகிம்சை என்பதற்கு யாருடனும் பகைகாணுத ஒரு உள்ளமும் புலன்களை அடக்குதற்கு எப்பொருளின்மீதும் பற்றற்ற ஒரு நிலையையும் இத்தேவாரத்தின்மீது காணலாம். இந்த உண்மையை நீங்கள் தெளிந்து கடைப்பிடிப்பீர்களாகில் இந்த உலகம் உங்கள் கைவசம்.

# சிவன் திருவடி தொழுவார் சிந்தை எதற்கும் அஞ்சவேண்டியதில்லை

திருச்சிற்றம்பலம்

**நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம் நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்**
**ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம் இன்பமே எந்நாளுந் துன்பமில்லை**
**தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்**
**கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க் கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னேமே.**

நாம் ஆர்க்கும் குடிமையாக இல்லை. எந்த ஒரு அரசாட்சியும் தம் அதிகாரம்! எம்மீது செலுத்தும் நிலையில் இல்லை. இதுவன்றி இயமனுக்கும் பயப்படோம்.

நரகத்தில் சென்று அழுந்தி இடர்பட பொய்யும் வஞ்சமும் இல்லாதோம்.

இந்நிலையில் இறுமாந்திருப்போம். நோய் அறியோம். யாரையும் பணியப் போறவர் அன்று. எமக்கு எந்நாளும் இன்பமே அன்றித் துன்பமில்லை. இவ்வளவு நிலையும் நமக்கு ஏற்பட்ட காரணம் தான் ஆரொருவர்க்கும் குடிமை அல்லது அடிமை இல்லாத தன்மை உடைய சங்கரன் நல்ல சங்கின் வெண்தோடணிந்த காதுடைய வனுன தலைவன்; அவன் ஒருவனுக்கே என்றும் மீண்டுகொள்ளாத அடிமையாகி அவனது கொய்திடும் மலரினது திவ்விய முடைய செவ்விய திருவடிகளையே அடைந்து கொண்டோம்.

அங்கு ஒருவனுயை பெருமானுக்கு அடிமையானமையின் பிறர்க்கு நாம் ஆளாவது இல்லை. குறுகினேம் என்றது சென்று அடைய முடியாதவனைச் சேர்ந்து கொண்டோம் என்ற கருத்தாகும். காணப்படாதது கேட்கப்படாதது பேசப்படாதது அதனை அடையும் பேறுற்றமையின் சிறப்பு தெரிவிக்கின்ருர்.

நடலை என்பது பொய்யின் கபடமாகும். ஏமாப்பது என்பது இறுமார்ந்து களிப்புடனிருத்தலாகும்.

பொய்யும் வஞ்சமும் நீங்கினுர்க்கு என்றும் துயரம் இல்லை. யாரும் அவர்க்கு துயரம் செய்து வெற்றி காண முடியாது என்கிருர்.

சங்கரன் என்றது நித்தியசுகம் தருபவன் என்பது பொருள் எம்பிரான் சிவன் நாமம் பல்வேறும் மங்களமும் சுகமும் பொருந்தியவன் என்பதாகும். குறுகுதல் என்பது சென்று அடைந்து கொள்ளல் பல் வேறு நிலையில் அந்தரப்படும் ஆன்மா அது சென்று சுகப்படும் நிலை சிவனைக்குறுகினுல் அன்றி முடியாது!

சிவன் வேதங்கட்கு எட்டாதவன் சரியை கிரியை செய்வராலும் காணப்படாதவன் அப்பால் மனம் ஒடுங்கிச் சென்று தன்னை மறந்திருக்கும் நிலையிலும் (துரியம்) சாரமாட்டாதவன்; அவனை வெயில் சுட்டுவாட்டாது வடவாமுகாக்கினி என்னும் கொடிய நெருப்பும் எரிக்காது. உலக மருட்சிகளாய எதுவும் அதனிடம் சேராது ஆனுல் இவை எல்வாம் கடந்த பரம சுகக்கடலாய் இருப்பது ஆனதினுல் அதைக் குறுகினுர்க்கு உலக துயரம் இல்லை எனப் பேசுகிருர். 1

**அகலிடமே இடமாக ஊர்கள் தோறும் அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கார் ஐயம்**
**புகலிடமாம் அம்பலங்கள் பூமி தேவி உடன்கிடந்தாற் புரட்டாள்பொய் யன்று மெய்யே**
**இகலுடைய விடையுடையான் ஏன்று கொண்டான் இனியேதுங் குறைவிலோம் இடர்கள் தீர்ந்தோம்**
**துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லுஞ் சொற்கேட்கக் கடவோமோ துரிசற் றேமே.**

எமது வாழ்க்கை பற்றிப் பேசினுல் என்னை நோக்கி நீர் எவ்வூரில் இருப்தென்ருல் அகன்ற இப்பூமி முழுவதும் எனது இருப்பிடமாகும். இந்த அகல் இடமாய பூமியில் இல்வாழ்கை நடத்தும் மக்கள் தாம் உணவு சமைத்து உண்ணும் போது பிறர்க்கும் ஒரு பிடி சோறு கொடுத்துண்பார்கள். அதாவது தருமத்தை பிறர்க்கும் கொடுத்து உண்பதை தமது வாழ்வில் நீக்கமாட்டார்கள். ஆதலின் பிச்சைச் சோறு எமக்கு உண்டு. எங்கே இரவில் தங்குவீர் எனக்கேட்டால் பழைய மடங்கள் உண்டு! அது மட்டன்றி இப்பூமியில் படுத்து உறங்கலாம்! அதுவன்றி அவள்மீது நான் படுத்தால் நீபோ என்று புரட்டித்தள்ளாள் நான் சொல்லும் இது பொய்யன்று மெய்யாகும். உமது வயோதிப காலத்தில் உம்மைப் பாதுகாக்க யாரும் காவலனுக ஏற்றுக் கொண்டாரோ எனக் கேட்டால் அதற்கு என்னைப் பாதுகாக்க மிக்க போர் வலிமை உடைய இடபவாகனத்தை உடைய பெருமான் என்னை ஏற்றுக்கொண்டான். ஆகையாலே இவ்வளவும் இருத்தலால் நமக்கு ஏதும் குதறவில்லை. எமது இடர்கள் யாவும் தீரப்பெற்ருேம். ஆதலால் பட்டு உடுத்து தங்கப்பட்டிகையும் கட்டி நாம தலைவர் என்று சொல்லும் அவர்கள் சொல்லும் நாம் கேட்கவேண்டியது இல்லை அப்படியாக நாம் யார்க்கும் பிழை செய்த குற்றம் எம்மிடம் இல்லை.

துரிசு என்பது குற்றம் அகல் இடம் என்பது பூமியின் பரப்பு. ஐயம் என்பது ஒருவர் சமைக்கும் போது பிச்சை வருவார்க்கு கொடுக்க என கூடுதலாக சமைக்கும் உணவு. விலக்கார் என்பது அறிவுடையவர் செயல் என்பதாகும்.

பூமிதேவி பொறுமை உடையவள் ஆதலினுல் அவள்மீது படுத்தால் புரட்டித்தள்ளாள் பொய்அன்று மெய்யே என்பது இப்படியாக நான் உபசாரமாகப் பொய் சொல்லவில்லை. உண்மையே பேசுகின்றேன் எனது துணிவு இதுவாகும் என்றது.

துகில் உடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லும் சொற்கேட்கக்கடவோமோ? என்றது அவரைச் சிறைப் பற்றிக் கொண்டுபோக வந்த சோழ அரசரது மந்திரிமாரையும் சேனுதிபதிகளையும் குறித்தது. 2

**வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம் மாதேவா மாதேவா என்று வாழ்த்தி**
**நீராண்ட புரோதாயம் ஆடப்பெற்றேம் நீறணியுங் கோலமே நிகழப் பெற்றேம்**
**காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக் கன்மனமே நன்மனமாக் கரையப் பெற்றேம்**
**பாராண்டு பகடேறி வருவார் சொல்லும் பணிகேட்கக் கடவோமோ பற்றற் றேமே.**

வார்பூட்டிய தனங்களை உடைய பெண்கள்வாழும் மனைகளில்சென்று நாம் சேரமாட்டோம். மகாதேவா மகாதேவா என்று நாம் வாயார வாழ்த்தி அந்த வாழ்த்தின் ஓசை பரந்த நீர்நிறைந்த நீர்நிலையெனும் கங்கையில் தோயப்பெற்ருேம். திருநீறு அணிந்தகோலமே எமது அழகிய கோலமாக நிகழப்பெற்ருேம். எம்பெருமான் சிவனை நினைந்துள்ள போது கருமையுடைய மேகம் பெருமழையைச் சொரிவதுபோல் கல்லாகிய எம் மனம் கரைந்து உருகி அந்த இரக்கமாய சிந்தையே நன்மனமாக எம்பிரானிடத்துக் கரைந்திடப்பெற்ருேம். இவ்வளவான பரம அதிசயமான கதியைப் பெற்றுக் கொண்ட நாம் பூமியை ஆண்டு யானைமீது ஏறிப் பவனிவரும் — வருகின்ற அரசர்கள் சொல்லும் கட்டளைகளைக் கேட்கக் கடவோமா? நாம் எல்லாப்பற்றையும் நீக்கிக்கொண்டோம்.

நமக்கு வாழ்வு தாழ்வு இரண்டும் சமமாகக் காணும் ஓர் பேறு பெற்ருேம். அதுவன்றி நீவிர் என்னை இப்பொழுது கொலைசெய்தாலும் எமது உயிர் அங்கால்சென்று அடைகின்ற கதி எதுவாகும் என்பதை இப்பொழுதே நாம் தெளிந்துகொண்டதால் அரசர் [illegible] போவதால் [illegible] நாம் அஞ்சவில்லை—அஞ்சவேண்டியது மில்லை என்பதால் பார் ஆண்டு பகடு ஏறி வருவார் சொல்லும் சொல்லைக் கேட்கக் கடவோமா? எனக் கூறுகிருர்.

பற்று அற்றது என்றது வாழ்வின் மீது எமக்கு ஆசை இல்லை. எமது வாழ்நாள்பற்றி நாம்பேணி எதுவும் செய்ய விரும்பவில்லை என்கிருர்.

பெண்கள் தம்மை அழகுபடுத்தினுல் அல்லது தமது தனங்களை வார் பூட்டி உயரக்கட்டிக் காட்டினுல் அதன் அர்த்தம் தாங்கள் ஆடவர் [illegible] பெரிதும் விரும்புவார் என்ற [illegible]கையாகும்! ஆதலினுல் இத்தகைய பெண்கள் இருக்கும் மனைகளில் நாம் போகோம் என்பது குறிப்பால் வார் ஆண்ட கொங்கையர் சேரும் மனையிற் சேரோம் என்கிருர்.

சிவ சிவ என்று பலகாலும் ஓத அவ்வாறு ஓதும் அவர் செயல் அவர் உடம்பைச் சூழ நீர் அலை போன்ற குளிர்ச்சியை ஏற்படுத்தும் ஆதலின் மகாதேவா மகாதேவா என்று வாழ்த்தும் நீராண்ட புரோதயம் ஆடப்பெற்ருேம் என்கின்ருர்.

சிவனை நினைந்தபோது நம் சிந்தை கரையும் பேறு பெற்ருேம் அது பெறற்கரியபேறு என்றதால் கன் மனம் நன்மனமாக கரைந்தது என்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உறவுஆவார் உருத்திரபல் கணத்தி னோர்கள் உடுப்பன கோவணத் தொடுகீளுள்வா மன்றே**
**செறுவாருஞ் செறமாட்டார் தீமைதானும் நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்**
**நறவார்பொன் னிதழிநறுந் தாரோன்சீரார் நமச்சிவாயஞ் சொல்ல வல்லோம் நாவால்**
**சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட சுடர்நயனச் சோதியையே தொடர்வுற் றோமே.**

எமக்கு உறவு யார் எனக் கேட்டால் உருத்திரராய பல கணத்தவருமாகும். நாம் உடுப்பது கோவண ஆடையுடன் கீள் உடையாகும் இவை இருக்கின்றன. எம்மைக் கொல்ல வருவாரும் கொல்லமாட்டார்கள்; எமக்குவரும் தீமைதானும் நன்மையாக சிறந்து முடியுமே அன்றி இனி ஒரு பிறவியில் நாம் சென்று சேரமாட்டோம். தேன் சொட்டும் பொன் போல் சிறந்து மஞ்சள் நிறம்படைத்த கொன்றை மலர்மாலையை அணிந்த சிவபெருமானது நாமமாய நமச்சிவாய என்னும் எழுத்தை சொல்ல எம் நாவில் வல்லமை உடையோம்! சுறுமீனைக் கொடியாக உடைய மன்மதனை சாம்பற் பொடியகும்படி நெற்றிக் கண்ணால் எரித்தருளிய சுடர்கொண்ட நெற்றியிற் கண் உடைய சோதியையே நாம் தொடர்ந்து கொண்டோம்.

கோவண ஆடை என்பது முழந்தாள் மேலாகக் கட்டும் துண்டுத் துணியினால் ஆனது; குறிமறையக்கட்டும் உள் உடையாவது கீள் உடை என்பது. அரையில் அணியும் துணியினாலான உடையாவது கோவணம் என்பது.

உருத்திர பல் கணத்தினோர்கள் என்றது சிவனுக்காக உலகப்பற்றினை நீக்கிக் கொண்ட சிவனடியார்கள்; மன்மதனை எரித்தது சிவனுடைய நெற்றியில் உள்ள கண்ணாகும். 4

**என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம் இருநிலத்தில் எமக்கெதிரார் ஆரு மில்லை**
**சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம் சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்**
**ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்**
**பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப் புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே.**

என்றும் நாம் யாவர்க்கும் ஒடுங்க மாட்டோம்: அன்றி தாழ மாட்டோம்; ஏனெனில் இந்தப் பெரிய பூமியில் எமக்கு எதிராக உள்ளார் யாரும் இல்லை; எமக்கு பகைவராக யாரையும் நினைக்கவில்லை. நாம் சென்று துர்க்கை காளி முதல் சிறு தெய்வங்களைச் சேரமாட்டோம். சிவபெருமானுடைய திருவடிகளையே சேரப் பெற்றோம்: இந்த ஒரு நிலையில் நாம் ஒன்றிலும் குறைவு உடையவர் அல்லோம். சிவபெருமான் திருவடியே சேர்ந்து கொண்டமையால் எம்மைக் கொல்ல வந்த சூலைநோய் எம்மை வருத்தலை விடுத்து தன் செயல் நீங்கி ஓடிப்போனார். இறந்தாரின் தலைகளினாலான மாலை அணிந்த திருமுடியை உடைய புண்ணியம் நிறைந்த பெருமானை நாம் அடைந்து கொண்ட புண்ணியத்தில் உள்ளோம்;

புண்ணியம் மேல்நிலையில் வைக்கும்; அதுவன்றி நாம் செய்யும் பொல்லாத பாவங்கள் கீழான நிலையில் வைக்கும். புண்ணியம் மூன்று வகையாகும்: மனம் வாக்கு செயல் எல்லாம் புண்ணியமாக வேண்டும். செயல்வாக்கு இரண்டிற்கும் மூலகாரணமான மனத்தை தூய்மை படுத்தினால் அன்றி வாக்கும் செயலும் புண்ணியமாகாது. ஆதலினால் மனத்தை முதல் தூய்மைப் பெறவைக்கவேண்டும்;

மனத்தூய்மைக்கு முதற்காரணம் எவருடனும் பகையில்லாத பகை பாராட்டாத வாழ்வேயாகும்; ஒருவனுடைய புண்ணியத்தை பகை கெடுப்பது; பகைகண்ட விடத்து நாம் அவருடன் உறவு கொள்ளாது நீங்குதல் நலம்; பகையை வளர்த்தால் உள்ளத்தின் நலம்கெடும்; இதனையே கருத்தில் கொண்டு என்றும் நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம் இரு நிலத்தில் எமக்கு எதிர் யாருமில்லை என்கிறார்; புண்ணியசாலிகள் பிறர் தம்மைப் பகைத்தாலும் தாம் பிறரைப் பகைக்கலாகாது என்பதை தெரியப்படுத்துகிறார். இதனை எவரும் உணரவேண்டும். உணர்ந்தால் பகை யாருக்கு வரும். 5

**மூவுருவின் முதலுருவாய் இருநான் கான மூர்த்தியே என்றுமுப் பத்து மூவர்**
**தேவர்களும் மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ் செம்பவளத் திருமேனிச் சிவனே என்னும்**
**நாவுடையார் நமையாள வுடையே ரன்றே நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான**
**காவலரே யேவி விடுத்தா ரேனுங் கடவமலோங் கடுமையொடு களவற் றோமே.**

படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் தொழிலைச் செய்கின்ற பிரமா விஷ்ணு உருத்திரன் என்னும் கடவுளரது மூன்று உருவின் முதல் உருவாகி; நிலம் நீர் நெருப்பு காற்று வானம் சூரியர் சந்திரர் ஆன்மா எனப்படும் எண்வகையாக நின்ற மூர்த்தியே என்று முப்பத்து மூவர்களாய தேவர்களும் அவரின் மிக்கோராய முனிவர்களும் சிறப்புடன் வாழ்த்திப் போற்றும் செம்பவளம் போலும் திருமேனி உடைய சிவனே எனப்போற்றும் நாவினை உடையவர்கள் நம்மை ஆளாக அடிமையாகக் கொண்டவர்கள். அதை விடுத்து அன்புவழி இலாத நிலையில் நாவலம் தீவிற்கு நாதரான அரசர்கள் எம்மை அழைத்திட யாரையும் அனுப்பினாலும் நாம் போகமாட்டோம்: எம்மிடத்து கொலை சண்டை களவு யாவும் இல்லாதிருக்கிறோம்!

கொடுமை என்பது பிறன் பொருளை அபகரித்தல்; பிறரிடம் வேண்டிக் கொண்டு இல்லையென்னல்; கொடுக்கு மதிப்பொருளை கொடாது ஏமாற்றுதல்! ஏமாற்றுக்கதை சொல்லித் தண்டுதல் முதலியனவாகும். இவற்றின் வழிதான் களவும்;

இதுவன்றி கொலை அடித்தல் பெண்களை வருத்தல் பிறரை நையவைத்தல் பிறரை ஏசுதல் மனம் நோகப்பண்ணல் பெரியவரை வயோதிபரைச் சித்த சுவாதீனமில்லாதவரை நோயாளரை இகழ்தல் இவையாவும் கொடுமை எனப்படும்;

சிவனை உண்மையாம்படி பூசிப்பவர் யாவரும் கருணை நிறைந்தவராகக் காணப்படுவர்; அப்படியான நிலையில் அவர் காணப்படாதிருந்தால் அவர் சிவனுக்கு அன்புடையர் அல்லர் என்பது தெளியப்படும். சிவனை வாயார வாழ்த்தும் அடியார்கள் பணத்திற்காகப் பொருளுக்காக இதனைச் செய்தால் அவரை வாயார வாழ்த்துவார் என்று சொல்லமுடியாது! என்பதை நன்றாகத் தெளியுங்கள்;

தெளிந்த பெருமக்கள் அனைவரும் சிவனைச் செக்கர்வான் மேனியன் எனவே சொல்கின்றனர்; ஆனதினால் செம்பவளத் திருமேனி எனக் குறிப்பிடுகின்றார்;

நாவலம்தீவு என்பது எல்லாப் போகமும் விளையும் பூமி; அங்கு எல்லாச் சிறப்பும் காணலாம்; அவர்களது போர்வல்லபம் பேசற்கரியது; இன்று நாம் அதனை வல்லரசுகள் எனச் சொல்லலாம்; 6

**நிற்பனவும் நடப்பனவும் நிலனும் நீரும் நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி**
**அற்பமொடு பெருமையுமாய் அருமை யாகி அன்புடையார்க் கெளிமையதாய் அளக்க லாகாத்**
**தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும் யானும் ஆகின்ற தன்மையனை நன்மையோடும்**
**பொற்புடைய பேசக் கடவோம் பேயர் பேசுவன பேசுதுமோ பிழையற் றோமே.**

நிலையாக நிற்கின்ற பொருள்களாய மரம் செடி முதலிய உயிரும் நடக்கின்றனவாய விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன மனிதர் தேவர் அசுரர் முதலாய உயிரும் நிலமும் நீரும் நெருப்புடன் காற்றுமாகி நெடிய வானமும் ஆகி அற்பமாயதும் பெருமையானதுமாய் அதுவன்றி அருமை உடைய கிடைத்தற்கரிய பொருளாகவும் காண்டற்கு அருமையானதானாலும் எல்லாப்பற்றையும் விடுத்து அவர்க்கே அடிமையானார்க்கு மிக எளியவராகியும் அகலம் நீளம் யாராலும் அளக்கமுடியாத தன்னந்தனியான பொருளாய தற்பரமாகியும் சதாசிவமாகியும் தானும் நானும் ஒன்றே ஆகின்ற தன்மை உடைய பெருமானை நன்மையோடும் பொற்புடைய நல்வார்த்தை பேசுவோம் அன்றி பேயரான மக்கள் மேடைகளில் புலம்புகின்ற வார்த்தை பேசமாட்டோம்;

சிவனை நன்மையான முறையில் நாம் சில பாடல்மூலம் பேசுதல் அன்றி வேறு பேச்சிற்கு இடமில்லை என்கின்றார். பொற்பாகப் பேசுதல் அளவுடன் பெருமையுடன் பேசுதல், திருநாவுக்கரசர்பெருமான் என்ன பொற்புடன் அமைதியாகப் பல பாடல்களால் எம்பெருமானைப் பேசிக்கொள்கின்றார்; பாடலால் அவர் பாடினதன்றி இன்றைய பிரசங்கிகள் போல் பேய்ப்பேச்சுப் பேசவில்லை;

தற்பரம் என்பது தானேதான் தமக்குள்ளதும்தானாயது. தனக்குள் தானாதயை நான் சேர்ந்துகொள்கின்றேன் என்றது நீரில் உப்புக் கரைவது போன்றதாகும்;

அற்பமும் பெருமையுமாக அது நின்றாலும் மிகமிக அருமையாகியது என்கின்றார், காண்டற்கு அரியது என்றபடி; ஆனால் எப்பற்றையும் நீக்கித் தனக்குள் ஒடுங்குவாரையே அன்புடையார் என இங்கு கூறுகின்றார்;

சிவன் ஒருவனை அடைதற்காக எல்லாப்பற்றையும் நீக்கியவரே அன்புடையார் ஆவர்;

காசுக்காகச் சம்பளத்திற்காகப் பிறர்க்காகப் புகழுக்காகத் தம்மை வைத்துச் சிலர் கும்பிடுகிறார். கும்பிட்டுக் காட்டுகிறார். இவர்கள் அன்புடையார் எனும் வரிசையில் இல்லை; 7

**ஈசனைஎவ் வுலகினுக்கும் இறைவன்தன்னை இமையவர்தம் பெருமானை எரியாய் மிக்க**
**தேசனைச் செம்மேனி வெண்ணீற் றானைச் சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய்கின்ற**
**நேசனை நித்தலும் நினையப் பெற்றோம் நின்றுண்பார் எம்மை நினையச் சொன்ன**
**வாசக மெல்லாம் மறந்தோ மன்றே வந்தீரார் மன்னவனா வான்று னாரே.**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈசனே எம் சிவனே; எல்லா உலகிற்கும் கடவுளாயவனே; தேவர்களது பெருமானே; நெருப்பாகி எங்கும் பரந்த தேசனே; செம்மையான மே[illegible] ன்மை நீறு அணிந்தவனே; மலை அரசன் மகளாய பொற்புமிருந்த பாவை போலும் இயல்பில் சிறந்துள்ள உமையம்மை என்றும் பணிசெய்து வழிபட்டு நலம்புரிகின்ற அன்புடையானே நித்தலும் நாம் நினையும் தன்மை பெற்றோம்; நின்று உண்ணுகின்ற சமணகுருமார் அன்று எம்மை

நினைத்துக்கொள்ளும்படி சொன்ன வாசகம் எல்லாம் அன்றே மறந்து விட்டோம்; இனி அவை வேண்டியதில்லை: எம்மிடம் எம்மை அழைக்குமாறு வந்த நீங்கள் யார்! அரசனிடம் மேலான பதவியில் உள்ளவர்களோ?

எல்லா உலகிற்கும் ஈசன் ஒருவனே! அவன் சிவன் ஆவான். அவனே நெருப்பாக எங்கும் பரந்தான், அவனிலாமல் நெருப்பாக இல்லை, ஆதலால் எமது சைவமக்கள் அக்கினியைச் சிவமாக வழிபடுவர். எல்லா உலகிற்கும் என்றது இந்த உடம்பு விட்டு உயிர்போகும் அந்த உலகும் வானம் பூமி முதல் எங்கும் பரந்த தேசம் அவனே என்பதால் தேசனை என்கிறார்.

சமணர் நின்று உண்பயர்; அதிகாலை உண்பவர்; சமணர் ஏதோ கடவுள்பற்றி இப்படி நீ நினை என்று சொல்லிச் சமண நூல்களில் எடுத்துக் காட்டுடன் சொன்னவர், ஆனால் அவை நினைக்க நினைக்கத் திருநாவுக்கரசர்க்கு இருளாகவே இருந்தது. சமணருடைய சூதுவாது இவை போன்றவற்றின் பெருக்கமே தருமசேனர் என்ற நிலையில் கண்ட மிச்சம். ஒரு ஆறுதலை அவர் காணவில்லை. இப்பொழுது சிவனை நித்தலும் நினைதலால் எழுந்த சிறப்பு மன அமைதி அளவிடற்கரிய ஆனந்தப்பேறு. ஒளிமயம் கருணை சமணர் உபதேசித்த தருமத்திலும் மேலான தருமநீதி யாவும் கைகூடலால் அதனால் இனி யாரும் தன்னை ஒன்றும் செய்யமுடியாது எனத் தெளிந்துகொண்டதால் நின்றுண்பார் நினையச்சொன்ன வாசகமெல்லாம் மறந்தோமென்கிறார்.

மற்றது சேனாதிபதிகள் மந்திரிகள் யாரையும் தம்நிலை உணரும்படியாக நீங்கள் யார்? அரசனுடைய மேலான பதவியாளரோ? எனக் கேட்கிறார்; அது அரசாங்கத்தின் சேட்டை: நம்மிடம் பலியாது என்றதால் இகழ்ச்சி போல யார் வந்த நீங்கள் என உம்மை நினைத்தீரோ என்றபடி; வான் தானார் என்றது உயர்ந்த பதவி குறித்து; 8

**சடையுடையான் சங்கக் குழையோர் காதன் சாம்பலும் பாம்பும் அணிந்த மேனி**
**விடையுடையான் வேங்கை அதள் மேலாடை வெள்ளிபோற் புள்ளியுழை மான்தோல் சார்ந்த**
**உடையுடையான் நம்மை யுடையான் கண்டீர் உம்மோடு மற்று முளராய் நின்ற**
**படையுடையார் பணிகேட்கும் பணியோ மல்லோம் பாசமற வீசும் படியோ நாமே.**

சடையுடையவன்: வெண்சங்கினால் ஆனதோடு அணிந்த காது உடையவன். சாம்பலும் பாம்பும் அணிந்த மேனி உடையவன்; இடபத்தை வாகனமாக உடையவன்; வேங்கைப் புலியின் தோல் மேலாக வெள்ளி போல் புள்ளி உடைய சிறுமானின் தோலை மேல் ஆடையாக சேர்த்துக் கொண்ட உடையினை உடையவன். இந்தக்கோலமுடைய சிவன் என்னையும் தனது பெருளாகக்கொண்டான். இத்தகைய நிலையில் அவனது ஆளாகிய நாம் உம்மோடு மட்டுமன்றி மற்றும் உம்மோடு கூடவந்துள்ள படைஞரின் கட்டளையை கேட்கும் பணி எமக்கு இல்லை; எம்மை கட்டிக் கொண்டு போகும் படியாக உமது சேனை எம்மை பாசத்தால் அறவே எம்மீது வீசும்படியான நிலையில் நாம் இருக்கின்றோமோ?

முன்னாக தம்மை ஆட்கொண்டு பெருமானின் இயல்பு சொல்லி அவனுடைய உடமை தானென்றதை விளங்கும்படி வைக்கின்றார். தான் சாதாரண மனிதன் அல்ல; ஓர் பெரியவனின் ஆள்; அவன் என்னை ஏற்றுக்கொண்டமையால் எனக்கு தீர்செய்யும் செயல் யாவும் அவனிடம் சேரும். அவனைப் பிரிந்து நாம் நின்றால் அல்லவோ நீங்கள் என்னை ஏதும் செய்யமுடியும். ஆனதினால் என்னையும் அவனையும் வேறாக்கும் செயல் உம்மால் முடியாது. இதை நன்றாகக் கண்டுகொள்ளுங்கள் என்றதாகக் கண்டீர் எனச் சொல்கின்றார்; தன்னைப்பற்றிப் பாசத்தால் இறுகக் கட்டி அதாவது கட்டிய கயிறு அறும்படி உமது சேனைகள் கட்டிக்கொண்டு போவது அது முடியாத செயல் என்பதால் பாசமற வீசும்படியோ நாம் எனக் கூறுகின்றார்; அரச சேனாதிபதிகள் வரும்போது அவரின் கீழ்க் கடமை ஆற்றும் சேவகர்களும் சேனைகளும் வந்திருப்பார்கள். எனவே அவர் யாரையும் நோக்கி உம்மோடு மற்றும் உமது ஆளாய் நின்ற படைஞரின் சொல்லுப்படி அடே வாடா பிடியடா இவனை; கட்டடா இவனை; கயிறு அறக் கட்டடா; விலா முறியட்டடா; கனக்கக் கதைக்கிறான் என்று இன்னவாறு பல சொல்லி என்னை வைதுகட்டும் படியான நிலையில் இல்லை;

பாசமற வீசும்படியோ நாமே என்றது எல்லாப் பாசங்களையும் நீக்கிய எம்மைப் பாசம்வீசிக் கட்டமுயன்றால் அப்பாசம் அறும்படியான பாதுகாப்பில் நாம் உளோம் என்றது குறிப்பாகவும் கூடும். 9

**நாவார நம்பனையே பாடப் பெற்றோம் நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்**
**ஆவாஎன் றெமையாள்வான் அமரர் நாதன் அயனொடுமாற் கறிவரிய அனலாய் நீண்ட**
**தேவாதி தேவன் சிவனென் சிந்தை சேர்ந்திருந்தான் தென்திசைக்கோன் தானே வந்து**
**கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலுங் குணமாகக் கொள்ளோமெண் குணத்து ளோமே.**

எமது நாவார எம் தலைவன் சிவனைப் பாடிடும் பேறு பெற்றோம். நாணம் வெட்கமிலாது பாயால் தமது உடம்பை மூடித் தம்மைப் பெரிதாக எண்ணிடும் சமணர் எல்மை நோக்கி இனியும் இகழாத நிலையில் அருள் பெற்றுக்கொண்டோம். எனக்குத் துயருற்றபோது அஞ்சாதே என அபயம் தந்து எம்மை ஆளப்போகின்றான் தேவர்களின் நாயகனான சிவன். அதுவன்றி [ பிரமனுடன் திருமால் ஆகிய இருகடவுளர்க்கும் அரிதற்கரிய நெருப்பாக நீண்ட தேவாதி தேவன் சிவன் எனது சிந்தையில் சேர்ந்திருந்தான். அதனாலே தென்திசைக்கு முதல்வனான இமயதேவன் தானே என்னிடம் வந்து தான் தலைவன்; தன் சொற்படி நான் நடக்க வேண்டும் என என்னை ஆட்சிபண்ணப் பார்த்துக் குற்றேவல் செய்கென்றாலும் அதனை நாம் நல்லது அப்படியே செய்கிறோம் எனக் கேட்க மாட்டோம்; நாம் இப்பொழுது சிவனது குணமான எண்களாய குணத்தில் உள்ளோம்.

வேறு பேதையரைப் புகழ்ந்து பாடிப் பழி எய்துப்பெறுது சிவனைப் பாடப்பெற்றதால் புண்ணியனைப் பாடிடும் தகவால் புண்ணியமே பெருகி என்றும் புண்ணியத்தின் விளைவில் உள்ளோம். சிவன் எம் சிந்தை சேர்ந்துள்ளான். ஆதலால் எம் சிந்தையில் வேறு பற்றுக்களாய குப்பைகள் தோன்றாது. அவன் அருள் பெருகிநிற்றலால் எந்த சங்கடத்திலும் அஞ்சாதே என நேரில் அவன் அருள வல்ல பேறு பெற்றோம் என்றதால் நாணற்றார்நள்ளாமே விள்ளப்பெற்றோம் என்கின்றார், சமணர் உடை நீக்கித் தமது உடம்பைப் பாயால் முடிக்கொள்பவர். இவர்கள் தம்மை உலகம் பெரிதாக மதிக்கட்டும் என்பதால் உடை ஒழிந்து நின்று உண்டு தலையில் மயிரைப் பிடுங்கி எத்தனையோ செயல் இப்படிச் செய்பவர்.

நாணம் உடையவர் இப்படிச் செய்வார்: உடையை மட்டும் தாம் வேறு விதமாக வைப்பதன் நோக்கம் தம்மை உலகம் மதிக்கவேண்டும் என்பது. காவி உடுப்பதும் சடைவைப்பது ஆகிய இவைகளுமே நாணமிலாதவரின் செயல்கள்! இவற்றால் ஏதும் பிரயோசனமில்லை;

சைவமக்கள் மானத்தைக் காப்பாற்றுபவர்கள். அதனாலே கீள் உடை கோவணம் அணிதல் சைவத்தில் துறவிற்குரிய செயல்கள். சைவத்தில் நன்குடையது: வெள்ளை ஆடை உச்சிவேளை நேரத்திற்கு உணவு இவையாவும் உண்டு; இதை இன்று நம் மக்கள் உணரவேண்டும். சைவ மக்கள் காலை உணவு உண்பதில்லை;

எண்குணத்தில் உள்ளோம் என்றது சிவனது குணம் எவ்வாறோ அவ்வாறே தானும் என்கின்றார்; அக் குணங்களாவன.

1. பிறப்பின்மை
2. இறப்பின்மை
3. பற்றின்மை
4. பெயரின்மை
5. வினையின்மை
6. உவமை இன்மை
7. குறைவிலா அறிவு
8. கோத்திரமின்மை என்பனவாகும்.

## கத்தியைத் தூக்கினாராம் அந்தணர்

### காரணத்தை அறிந்த மக்களிற் சிலர் கவலை

### அந்தணர் செயல்கண்டு அந்தணர்களே சீற்றம்

கரைநகர் மண்ற்காடு முத்துமாரியம்மன் கோவிலில் சென்ற திருவெம்பாவை ஆரம்பத்திற்கு முதல் நாளன்று சுவாமியைப் பிரட்டி விட்டு களவாட எத்தனித்தனர்; யந்திரம் களவாடப்படவில்லை; எனவே மறுநாட்காலை பிரட்டப்பட்ட சுவாமியை மருந்து சாத்தி திரும்பவும் பூசையை தொடர்ந்து நடத்துவற்கு ஐயரும் பொது மக்களிற் சிலரும் எத்தனித்தனர். அதைக்கண்ட எஜமான் அப்படிச்செய்ய வேண்டாம் எனத் தடுத்தார்; தடுத்த எஜமானை ஐயர் கத்தியைத் தூக்கிக் காட்டி வெட்டுவேன் எனப் பயமுறுத்தியதாக அங்குள்ள வேறு சில அந்தணரும் எஜமானுமாகத் தெரிவித்தனர். ஆனால் ஐயர் அப்படிச் செய்யவில்லை. தேங்காய் உடைப்பதற்காகவே ஐயர் கத்தியைக் கையிலெடுத்ததாசச் சிலர் என்னிடம் தெரிவித்தனர். இக்கோயிலைத் தனிப்பட்டவரிடமிருந்து எடுத்து பொது நிர்வாகத்தில் விடவேண்டும் என்றும் சிலர் என்னிடம் அபிப்பிராயம்கூறினர். ஆனால் அந்த ஊரிலுள்ள பெரியோர்க்கு சந்திரதீபம் தெரியத் தருவது யாதெனில் கோவிலில் கட்சி நிலையைப் பெருகவிடாது இருசாராரையும் அழைத்து கோயில் பேரில் நீதிஸ்தலத்திற்கோ அன்றிப் பொலிஸ் நிலையத்திற்கோ செல்லாது எல்லோரும் ஏகமனதாகத் தீர்மானித்து பகையின்றி நன்முறைகளைக் கையாண்டு அக்கோவிலை நடாத்திட ஆவன செய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

ஒருவர் செய்த பிழையைக் கோவில் நன்மைக்காக மன்னித்து ஆவன செய்து ஆலயத்தை நன்முறையில் வழிநடத்தும்படி சந்திரதீபம் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறது. இதுவே தெய்வ சம்மதமாயும் இருக்குமென்பதில் சந்தேகத்திற்கிடமில்லையென்று சந்திரதீபம் கருதிக்கொள்கிறது.

## இலட்ச அர்ச்சனையா? இன்றேல் நினைச்சபடி அர்ச்சனையா?

காரைநகரில் ஒரு பிள்ளையார்கோவிலில் இலட்சார்ச்சனையை ஒரேநாளில் நடாத்த நிர்வாகம் முனைகின்றது; ஆனால் அது முறையானதாக இருக்கப்போவதில்லை. ஒரேநாளில் இலட்சம் நாமமும் ஒருவர் வாசித்து முடிப்பது அரிது: நாம் என் செய்வது? சொன்னாலும் கேட்கிறார்களில்லை என நம்மிடம் மிகு கவலை தெரிவித்தார் ஓர் அந்தணர்.

நான் சொன்னேன் இலட்சார்ச்சனை என்பது பலவிடமும் தனது இலட்சியம் கெட்டு கண்டபாட்டில் நடத்தி அதை வியாபாரமாக்கிவிட்டார்கள்.

நாளும் அர்ச்சனை நல்ல உறுப்பு; ஆனால் அது நன்முறையில் பத்திமையாக எம்பிரானுடைய நாமத்தை பொறுப்புடன் சொல்லி அதே நாமத்திற்கு ஒரு பூ எம்பெருமானுடைய திருவடிகளில் சாத்திட வேண்டும்; சொல்லிய ஒவ்வொரு நாமத்திற்கும் பூ இதுதான் மேன்மையான செயல்; நாம் இதற்குமேல் என்செய்யலாம்; கோயிலிலே மக்கள் அமைதியாகக் கருமம் செய்தால்தான் ஊருக்கு நலம்; செய்விப்பவருக்கும் நலம்;

இன்று பிராமணர் பலரும் இலட்சார்ச்சனை என்று துவக்கித் தமது பொருள் சேகரிப்பதை ஒரு இலட்சியமாகக்கொண்டு நான் பிடி நீ பிடி அவர் பிழை நான் சரி என்று மோட்டார் வாகனங்களில் ஓடித்திரியும் (கொண்டா சைக்கிளில்) பிராமண சமாஜத்தைச் சேர்ந்த ஐயாமாரின் அறிவுத்திறனை ஒரு தமிழ் ஆராய்ச்சி மகாநாடு மூலமே மெச்சவேண்டும்;

இப்படியாக ஒரு நாமத்திற்கு ஒரு பூச்சாத்தி வழிபடுவதென்றால் அது நலம். அதுவே திருவீழிமிழலையில் நாளும் ஆயிரம் தாமரைப்பூக் கொண்டு நாராயணப் பெருமான் அர்ச்சித்தார், ஒருநாள் ஒருபூக் குறைவாதலும் அதற்குப் பதில் தனது கண்ணைப்பிடுங்கி மலராக இட்டார்; அதனால் அவர்க்குச் சக்கரப் படையை எம்பிரான் கொடுத்தருளினார் என்பதை விளங்கிக்கொள்ளவும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிகண்டி கந்தவனக்கடவை

# முருகன் ஆறு ஆண்டுகளாக சிறையில் வாடுகிருன் பாருங்கள் !

## கந்தவனக்கடவை ஆலய முகாமையாளர்கள் எனக்கும் சர்க்கரை பூசிவிட்டார்களாம் ! !

யாழ்மாவட்ட அரசாங்க அதிபரினல் பொலிகண்டி கந்தவன ஆலய சீர்கேடுகள் பற்றி விசாரணை செய்த தம்பிமுத்து (ஏ. ஜி. ஏ.) தலைமையிலான கமிஷன் தனது அறிக்கையை அரசாங் அதிபருக்குச் சமர்ப்பித்துள்ளது. தற்போதைய நிர்வாகிகள் செல்லையா யோகேந்திரனும் (காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்) செல்லன்இரத்தினம் ஆகியோரால் இக்கோயில் பாழடைந்து போகிறது. நிர்வாகம் ஊழல் நிறைந்தது, பொது நிர்வாகம் ஒன்று அமைக்கப்படவேண்டுமென்றும் ஒரு தற்காலிக நிர்வாகத்தை நிறுவி ஆறு ஆண்டுகள் நிறைவேருத கும்பாபிசேகத்தை நடத்த வேண்டுமென்றும் சிபார்சு செய்துள்ளது. தேவர்களை சிறைமீட்ட முருகன் மேற்படி நிர்வாகிகளினல் ஆறு ஆண்டுகளாக சிறைவைக்கப்பட்டுள்ளான். இச்சிறையில் இருந்து முருகனை மீட்க இந்துசமய இயக்கங்கள் முன்வராதா? புழுப்பிடித்து அறையெங்கும் துர்நாற்றம். இந்த கடும் சிறைவாசம் பொலிகையம்பதி கந்தவனக்கடவை முருகனுக்கு; 30 விக்கிரகங்கள் இந்த துர்நாற்றச்சிறையில் வாடுகிருர். நிர்வாகியோ கும்பாபிசேகத்திற்கு கொடுத்த பணத்தில் கொண்டா எடுத்து மனைவியை ஏற்றி தெருவெங்கும் வீதி வலம் வருகிருர். இந்துமன்றங்கள் சைவப்பெரியார்கள் சுவாமிநாத தம்பிரான், இந்துகலாச்சார அமைச்சர் எல்லோரும் ஏனே பாராமுகமாக இருக்கிருர்கள். எவ்வளவுதான் பொலிகை கிராம மக்கள் எழுதியும் யாரும் நடவடிக்கை எடுக்கிருர்கள் இல்லை. எல்லோருக்கும் இனிக்க சக்கரை கொடுக்கிருர் முகாமையாளர். சிவபாதசுந்தரனர், சோமசுந்தரபுலவர், சிவசம்புப்புலவர் ஆகியோரால் பாடி வழிபட்ட முருகன் கண்கொடுத்த முருகன் தான் சிறைமீள முடியாமல் வாடுகிருன். இப்பூமியில் சைவம் வளர்க்கும் பெரியார்கள் முருகனை ஒருதடவை நேரில் பார்த்தால் கண்ணீர் சிந்துவார்கள். கமிஷன் விசாரணையில் சுவாமியை ஒழித்தது, பவுண் வேல்கள் விற்றது பட்டுத் துணிகள் விற்றது அரிசி விற்றது பழைய நெய்வேத்தியம் சுவாமிக்குப் படைத்தது கோவிலுக்குள் விபசாரம் நடத்தியது, அபிஷேக சாமானுடன் இடியப்பப் பார்சல் வைத்தது போன்ற பல குட்டுகள் அம்பலமாகிவிட்டன, சைவ அன்பர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து இந்த நிர்வாகத்தை உடனடியாக மாற்றி நல்ல நிர்வாகம் ஒன்றைத் தெரிவுசெய்து தேவர்களை சிறைமீட்ட முருகனைச் சிறைமீட்க முன்வாருங்கள்.

இப்போ சந்திரதீபம் பொலிகண்டிப் பகுதிக்கு ஒருவருக்கும் வருவதில்லையெனக் கூறுகிருர்கள். கந்தவன ஆலய முகாமையாளர்கள் உங்களுக்குச் சக்கரை பூசினர்களா? அல்லது காட்டினர்களா? இச்செய்திப் பத்திரிகையைப் பொலிகண்டியில் உள்ள ஐயர்மாருக்கும் கோயில் மனேஜர்மாருக்கும் அனுப்பி உங்கள் துணிவை வெளிப்படுத்தவும்.

யோ. றமேஷ்குமார்
பழைய சீனிக் கொம்பனியடி,
பொலிகண்டி,
வல்வை.

# துர்க்காதுரந்தரி தங்கம்மை சைவப்பெண்களின் மரபை நீங்கியவர்

## சைவப்பெண்களைப்பற்றிப் பெரியபுராணத்தில் சேக்கிழார் கூறுவதைக் கேளுங்கள்

துர்க்காதுரந்தரி சிவத் தமிழ்ச் செல்வி என மேடையில் இலக்கணமுடன்பேசும் சிறப்பிற்காக மல்லாகத்தைச் சேர்ந்த பண்டிதை அப்பாக்குட்டி தங்கம்மாவைப் பலர் சிறப்பித்துப் பேசுவதுண்டு.

நாம் அப்பெண்மணியால் சைவ நீதிக்கு ஏற்பட்ட குறைபாட்டை எடுத்துக்காட்டியதால் பலர் சைவ நீதி சீலம் என்றது யாது என்பது விளங்காசமுறையில் நம்மை மிகு கேவலமாகப் பேசலாம் எனக்குக் கடிதமும் எழுதலாம்.

நாம் அவரது அறிவுத் திறனை உணர்ந்துகொண்டு எல்லாருக்குமாகத் தங்கம்மாவினுடைய பிரசங்கம் மங்கம்மா சபதம் என்னுமாப்போல் கேட்பதற்குச் சிறப்பாக இருக்கும். அதில் தெய்வீகநிலை இல்லை என்பதை என் உளத்தில் ஏதும் பகையான நோக்கமின்றி நாம் வெளிப்படுத்துகின்ரேம்.

சைவப்பெண்கள் அருள் நிலையில் உயரவேண்டின் அல்லது உயர்ந்தார் என்ருல் அவர்களது வாழ்வு முற்றிலும் திருநாவுக்கரசர் கூறிய மரபில் விளங்கும்.

முதற்கண் அருள் எய்திய சைவப் பெண்கள் யாரும் மேடையில் தோன்றவில்லை. அவர்கள் மிகு அடக்கமாக இருந்து வாழ்ந்தவர்கள்.

சைவம் பிரசாரத்தில் வளர்வதில்லை. அடக்கமுடைய நல்வாழ்விலும் தூய கிரியாபாகங்களிலும் வளர்வது; அடுத்து நாம் தெரிவித்தது போல் எண்வகைச் சீலங்களையும் தவருது கடைப்பிடிப்பதால் வளர்வது.

பெரியபுராணத்து இந்தத் திருநாவுக்கரசரை நல்நெறிக்கு ஆட்படுத்திய திலகவதியார்பற்றிச் சேக்கிழார் மிகு சிறப்பாக எடுத்துச் சொல்கிருர்; அவை பின்வருமாறு '

" அம்பொன் மணிநூல் தாங்காது அனைத்து உயிர்க்கும் அருள்தாங்கி; இம்பர் மனைத்தவம் செய்து திலகவதியார் இருந்தார் ". இந்த வர்க்குகளை விளங்கிக்கொள்வது கடினம். இதைத் தெரியவல்ல தெரிந்து நடக்கவல்ல பெரியார் புண்ணிய பூமி என்னும் தென் இந்தியாவிலும் ஓரிருவர் இருப்பரோ என நாம் சந்தேகித்தால் எமது யாழ்ப்பாண மக்களைப்பற்றிப் பேச வேண்டியதில்லை.

சேக்கிழாரது வாக்கில் ஒரு சைவப் பெண் நல்லநிலை அடைய விரும்பின் அதற்கு இரண்டுவழிகள் உண்டு. ஒன்று தான் ஓர் கணவனைப்பெற்று அவன் சொற்படி ஒழுகி அவனுக்குச் சேவை செய்வது ஒரு வழிபாடாகக் கொள்வதாகும். அடுத்துத் திருமணம் விரும்பாது அல்லது கணவன்பெற வழி இலாதவர் தத்தம் இயல்பில் தமது மனையில் தங்கியிருந்து எம்பிரான் இருப்பிடங்கள் சென்று பணிசெய்து வணங்கித் தமது வாழ்வை எந்நிலையிலும் ஆண்கள் மத்தியில் அல்லது ஆண்கள் சகவாசத்தில் வைத்துக் கொள்ளாதிருப்பதாகும்.

இவை இரண்டில் கணவன் சேவையால் மேம்பாடு உற்றவர் காரைக்கால் அம்மை; அடுத்து மங்கையர்க்கரசியார். இவர்களது வரலாற்றை நோக்குமிடத்து இருவரும் கணவன் சேவையைக் கடவுள் சேவையாகக் கொண்டவர் எனப் பெரியபுராணத்துச் சேக்கிழார் கூறுகிருர்.

காரைக்கால் அம்மையைப் பற்றிப் பொற்புடன் சொல்லும்போது அவரது கொள்கை " கணவன் உரை காவாமை மெய்வழி அன்று " என இருந்ததாகச் சொல்கின்ருர். இதனல் காரைக்கால் அம்மை உயர்வை யாரும் விளங்கலாமே! இந்தத் தமிழ் வார்த்தையை ஆராய இன்று தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிற்கு எட்டாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நமது தமிழ்மக்கள் சைவநெறியை வளர்க்க விரும்பின் மேடைமூலம் பேச்சுக்கள் நடத்துவதனல் முடியாது என்பதை திருநாவுக்கரசரது தேவாரத்தால் அறியலாம்.

" நன்மையோடும் பொற்புடைய பேசக்கடவோம் பேயர் பேசுவன பேசுதுமோ பிழையற்ருேமே " என்கின்றபொழுது பேயர் என்றது இன்றைய பிரசாரப் பேதைகளென்ருல் மிகையாகாது.

அடுத்து எந்த ஒரு சைவப்பெண்ணும் ஆண்கள் அங்கம் வகிக்கும் சபையில் தலைமை வகிக்கவோ அல்லது ஆண்களை வழிநடத்தவோ முற்படார் என்பதை மங்கையர்க்கரசியார் எனும் பாண்டிய அரசனின் பட்டத்துத்தேவியின் நடத்தையைச் சம்பந்தர் தம் தேவாரப் பதிகமூலம் வெளிப்படுத்துகின்ருர்.

' பாங்கொடு பணிசெய்து பரவ ' என்பதை விளங்கினல் பெண்கட்குரிய பாங்கு அடக்கம் என வெளிப்படையாகப் பேசுகிருர்.

இந்தநிலையில் மங்கையர்க்கரசியாரின் பாங்கு எப்படி இருந்தது என்பதை பெரியபுராணத்தால் நீங்கள் அறியுங்கள்.

இன்று நம் நாட்டில் எக்ஸ்போரு என்னும் பூஞ்செடி எல்லா இடமும் நிறைய உண்டு. எல்லா வீடுகளிலும் மஞ்சள் சிகப்பு வெள்ளை என்னும் பல நிறத்திலும் காணப்படும். அவை பார்வைக்கு அழகே ஒழியப் பூசனைக்கு உதவாது. ஆனதினல் தங்கம்மாவின் பேச்சு கேட்க நன்ருக இருந்தாலும், பணம் வசூலிக்க வசதியுடையதாக இருப்பினும் அருள்நெறியில் மேலோங்கிடச் சைவமக்களை வழிப்படுத்தாது. உண்மையாக நாயன்மார்காட்டிய அறநெறிகள் ஏதும் தங்கம்மாவிடம் இல்லை. துர்க்கையம்மன்கோவில் தொண்டர்படையும் திருப்பணிச்சபை அங்கத்தவரும் அங்குள்ள அர்ச்சகர்களும் நடந்து கொள்ளும் முறை நமது கருத்தை உறுதிப்படுத்தும்.

சைவமக்களை வெளிவேடத்திலும் வாய்ப்பேச்சிலும் எடுபட்டு மயங்கிப் போகாதிருக்கும்படியாக என் பத்திரிகைமூலம் இக்கருத்தை வெளிப்படுத்துகின்றேன்.

தங்கம்மா மீதோ வேறு யார்மீதுமோ எனக்குப் பொருமையுமில்லை; பகையுமில்லை. தவருன பாதையைத் தவறு எனச் சொல்வது என்பணி.

# வள்ளலார் வளர்த்த அருள்நெறியை வாரியார் மாசுபடுத்திவிட்டார் !

## வாரியார்தமைப் பின்பற்றுவோர் அனைவரும் இருள் உலகிலே புகுவார் என்பது திண்ணம்

" வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்ருே! இந்த ஏவழ படும்பாடு உனக்குத் திருவுளச் சம்மதமோ!' என்று பாடினர் இராமலிங்க சுவாமிகள். இவரைத் தென்னிந்தியாவில் வள்ளலார் என்று மதிப்பிட்டு அழைப்பார்கள். அத்தகைய இராமலிங்க சுவாமிகள் பாடிய பாடல்கள் சிலசத்துடையன. அதனை ஓதுவாரை அருள்நெறி அன்புநெறி ஆகிய இவற்றில் சேர்க்கவல்லன அப்பாடல்கள்.

அம்பலத்தரசே ஆடிய பாதம்; ஆணிப் பொன்னம்பலம் எனத் தொடங்கும் இப்பாடல்கள் சத்துடையன. ஓதுவாரைத் தீங்கு வழியில் நின்றும் பாதுகாப்பன.

ஆனல் இராமலிங்க சுவாமிகள் செய்த பாவமோ அறியோம் அவரை தீமையான கொள்கையும் சுயநலமும் வஞ்சனையும் ஏமாற்றமும் மிகுந்த பலர் அவரைப் பின்பற்றும் மக்களாகி அத்தகைய செயலால் வள்ளலார் அருள்நெறி யாவும் இருள் ஆக்கப்பட்டு அது ஒரு வாய்ப்பேச்சின் இருள் ஆகிவிட்டது.

வள்ளலாரும் மேடையில் பேசுபவராய் அத்துடன் பிரசங்கமும் செய்பவரென்று அவரைப்பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. ஆனல் அவர் வழியான பிரசங்கம் பொருள் ஈட்டும் ஒரு பணியானல் அவரது பிரசங்கத்தால் ஏதும் நலம் எய்தாது என்பது திருநாவுக்கரசரது தேவாரமூலம் தெளியலாம்.

தென் இந்தியாவில் இன்று சமயம் கோயில்தொண்டு இவ்வளவும் வியாபாரமாகி உள்ளது. இதைத் தென் இந்தியர் உணரமுடியாததற்குக் காரணம் தென் இந்தியாவில் பொருளாதாரநிலை மிகவும் கலங்கிய நிலையில் வந்ததுதான்.

தென் இந்தியாவில் பணம் படைத்தோர் பலர் தமது பணத்தை இன்னமும் பெருக்க நினைந்து அதனல் தருமத்தையும் விற்ருதல் பணம் பெருக்கும் நிலையில் வந்தனர்.

சமயம் கலை வைத்தியம் இவ்வளவும் பொருள்பெருக்கும் நோக்கமுடன் கலந்தால் முடிவு இருளாகி அக்கலைகள் அழிந்தொழிவதாகும்.

இந்த நிலையில் தென் இந்தியர் பலர் பணம் புகழ் இவற்றின்மீது கொண்ட பற்றை அருள்பெருக்கும் செயலிலும் தளர்த்திட முடியாது தவித்துதறிய பணமே தமது செயலின் பெறுபேறு என நினைந்தனர்.

இந்தநிலை இங்கு எமது நாட்டில் பரவாதபடி யோகசுவாமிகள் முன்பிருந்த அருள்நெறியாளர் பலர் செய்த நற்றவத்தினல் யாழ்ப்பாணத்தில் மட்டும் ஆங்காங்கு ஓரிருவர் இலைமறைகாய்போலத் தொண்டை அல்லது தருமத்தை வியாபாரமாக்காது அல்லது விற்காது செயல்படுகின்றனர்.

இது இன்று யாழ்ப்பாணம் செய்த புண்ணிய விளைவு எனலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருக கிருபானந்தவாரியார் எனத் தம்மை ஓர் பட்டப்பெயருடன் சிறப்பித்து பிரசங்கம்செய்து பொருள் ஈட்டி அதுவும் ஏழை மக்கள் அவரது பொய்ம்மையை மெய்யென நம்பி கொடுக்கும் பணத்தையும் வாரிக் கொண்டு நேர்மையற்ற வழியில் நடந்து கொள்ளும் அவரை அவர் வழி பிழை தவறுடையது என எம் நாயன்மார் வளர்த்த அருள்நெறிக்கு நேராய இருள்நெறியானது எனச் சொல்லவேண்டிவருவது உலக மக்களின் நலன் கருதி அன்றி வாரியார் மீதுகொண்ட குரோதத்தால் அல்லது பகையால் சொல்லவில்லை.

எமது பத்திரிகை நாயன்மாரது அருள்நெறியை உலகறியச் சொல்ல வந்த இடத்து இருள்நெறியையும் தெரிவிக்கவேண்டியது என் கடமையாகும்.

இடையிடையே சட்டினியின் நலமும் பெண்கள் இயல்பும், மோதிர நலனும் தக்காளிப்பழ இரசமும் சிங்கப்பூர் பயணமும் தனது மதிப்பும் சொல்லி ஏதோ தாளம் தட்டி கதை சொல்லி வேடிக்கை பண்ணிப் பிரசங்கம் செய்யும் வாரியார் பிரசங்கம் பொற்புடையதல்ல. இதைத்தான் பேயர் பேசுவன எனக் குறிப்பிடுகின்றார் திருநாவுக்கரசர்.

வாரியார் பத்திக்கார பணக்காரப் புள்ளிகளும் வேடிக்கை விரும்பும் மிலேச்சரும் தங்களிடம் நன் மனப்பான்மை இருந்தால் திருநாவுக்கரசர் தம் நிலைபற்றிச் சொல்வதையும் வாரியார் தம் நிலைபற்றிப் பேசுதலையும் ஒப்புநோக்கி எது அருள்நெறி எது இருள்நெறி எனத் தெளியுங்கள்.

## ஆறுமுகநாவலர் அவர்கள் சைவத்தின்கண் பகையைப் பெருக்கியவர்! அவரைப் பெரியவரென்று கருதமுடியாது

செம்மை வெண்ணீற்றின் ஒருமைப் பாடே பெரியபுராணத்தின் சாரமாகும். நீறு அணிந்தார் யாவரும் சிவசம்பந்தமானவர் என்பது கருத்து. ஆதலினாலே திருநீறு அணியும் மக்களிடத்துக் கட்சியினை உருவாக்கித் தற்பெருமையைப் பெருக்கிப் பணக்காரர் ஏழை தீண்டற்குரியவர்; தீண்டற்கரியவர்; தீண்டமாட்டாதவர் நலமுடையவர் நலமிலாதவர் என்ற பாகுபாட்டைக் காட்டாது எல்லோர் மீதும் அன்புநிலை பாராட்டலே உண்மையான சைவம் என்பது திருஞானசம்பந்தப்பெருமானின் திருவாக்கு. மங்கையர்க்கரசி எனத் தொடங்கும் தேவாரப் பதிகம் காண்க.

இந்த ஒரு நிலையை உணர்ந்துகொண்டு ஐந்தாம் குரவர் நாவலர்பெருமான் என்று ஆறுமுகநாவலரைப் பெருமைப்படப் பேசும் எம் சைவமக்கள் ஆறுமுகநாவலர் கண்டனத்தாலும் வழக்காடலாலும் எதனை வளர்த்தார் என்பதை தெளியட்டும்.

ஆறுமுகநாவலர் சைவர் எனச் சொன்னது சிலரையே குறிப்பிட்டது அன்றித் திருநீறு பூசுவார் பலரையும் சைவர் எனச் சொல்லவில்லை.

ஆகையால் நாம் எம்பத்திரிகை மூலம் அவர் செயல் பழுதுடையது எனக் கூறவேண்டி வந்துளது. இதை நான் நாவலரைக் கண்டிக்கிறேன் எனக் கொள்ளமுடியாது.

நமது நோக்கில் திருநீறு பூசிய ஏனைய மக்கள்போல் அவரும் ஒருவரன்றி அவரிடம் பெருமைக்குரிய அருள்நிலைகள் காணப்படவில்லை.

அவரைக் குரோதம் நிறைந்த உள்ளத்தர் என்றே சொல்லலாம். முன்னே தரப்பட்ட தேவாரத்தை வைத்துக்கொண்டு நாவலர் என்னாகினார் என்பதைச் சைவமக்கள் தெளியட்டும்.

நாவலர் பொற்புடன் பேசமாட்டாத பேயர்கூட்டத்தைச் சேர்ந்தவர் என்பதைப் பொது அறிவில் தெளியலாம். இதற்கு விசேடமூளை தேவை அன்று!

## திருக்கோணமலையில் காளி அம்மையும் பிள்ளையாரும் பகையாம்

திருக்கோணமலையில் காளிகோயிலும் பிள்ளையார் கோயிலும் அருகருகே உண்டு. இரண்டும் வெவ்வேறு நிர்வாகங்களில் உள்ளன, காளிக்குப் பிராமணர் பூசையும் பிள்ளையாருக்குச் சைவமக்கள் பூசையும் செய்வார்கள். ஆனால் பிள்ளையார் வீதிவலம் வந்தால் காளிகோவில் கதவு பூட்டப்படும். காளி வீதிவலம் வந்தா பிள்ளையார் பதிலுக்குப் பதிலாகக் கதவடைப்பு நடைபெறும். இது இரண்டு கோயில் நிர்வாகத்திற்கும் உள்ள உட்பகை.

பிள்ளையார்கோவில் சைவர் தமது கோயில் கருமம் எல்லாம் ஒலிபெருக்கிமூலம் ஊரடங்கக் கத்திக்கொண்டு நடத்துவார்கள். மந்திரம் சரியாய்ச் சொல்லமாட்டார்கள். ஆனால் ஒலிபெருக்கிமூலம் கத்தும் கத்தல் ஐயோ காதைப் பிடுங்கும். அங்கு பொதுவாக எல்லாக் கோயிலிலும் இந்த ஒலிபெருக்கி அநியாயம் கூடியே கொண்டது, ஒரு கட்டுப்பாடில்லை. இப்படியாகத் திருக்கோணமலையில் கோயில்பேரில் பெருகும் பகையையும் அநீதிகளைப் பற்றியும் அங்கு சட்டமையாற்றும் ஒரு வட்டாரக் கல்வி அதிகாரி எம்மிடம் தெரிவித்து, அங்கு மக்கள் கோவிலையும் சைவ நீதிகளையும் மதிப்பது மிகக் குறைவு எனக் கவலைப்பட்டார்.

## தெய்வநிலையில் ஒழுகிவந்த தென் இந்தியா சினிமா வலையில் சிக்கிச் சீரழிந்துவிட்டது

புண்ணிய பூமியாக தென் இந்தியா இருந்த காலத்தில் இருந்த பெருமக்கள் யாவரும் உண்மையில் உறுதியும் பொய்மையான பணப்பெருக்கத்தில் பற்றில்தாத வாழ்க்கையும் உடையவராய் இருந்தார்கள்.

உண்ண உணவிலாமல் இருந்தாலும் உடுக்கத் துணி இலாதிருந்தாலும் தமது தருமம், சத்தியம், சாந்தம் அறிவு இவற்றைக் கைவிடவில்லை.

நாம் கூறிக்கொள்வது பாரதியார் இந்நிலையில் நின்றவர், அவருக்குப் பின்னால் அவரது அருள் அன்பு எனும் நெறியைக் கடைப்பிடித்தோர் யாருமில்லை.

இன்று தென்இந்தியர் பலரும் கல்வித்திறனை, பேச்சுத்திறனை விழா மூலம், மேடைமூலம் காட்டி அறநெறி ஒருவிய மக்களாகி உள்ளனர்.

சுருங்கச்சொன்னால் புண்ணிய பூமி எனும் தென் இந்தியா முழுவதும் புண்ணியத்தின் பயன்கெட்டு பொருள் எனும் நிலையால் வேடிக்கை காண்கின்ற பொற்பிலாத பேயரின் சினிமாப் பூமி என்றே சொல்ல வேண்டி உளது. இதை நாம் பகைமையால் சொல்லவில்லை. தென் இந்தியாவில் அருள்நெறி மீண்டும் தழைக்கவேண்டும் என்னும் ஆசையால் சொல்கின்றோம்.

## கோயிலில் கலியாணம் செய்வது ஒலிபெருக்கி பாவித்தல் என்பன தவறாகும் என்கிறார் குகதாசக்குருக்கள்

''கோவிலில் கலியாணம் செய்தல் அதுவன்றி ஒலிபெருக்கி பாவித்தல் இவை யாவும் தவறான செயல் என்பதையும் இவை ஆன்மீகத்துறையில் பழுதானது என்பதையும் நான் உணர்கிறேன்'' என்று ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவில் பிரதம குருவான ஸ்ரீ குகதாசக் குருக்கள் நம்மிடம் நேரில் தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் சொன்னார்; இந்த நிலையில் நாம் ஒன்றும் செய்ய முடியாமல் வந்துவிட்டது. ஏனெனில் மக்கள் இதனை உணர்கின்றார் இல்லை. பொதுவாக மக்கள் தங்கள் வசதியைக் கருதினார்களே அன்றி கோவில் நலத்தைக் கருதுவாராக இல்லை.

நாம் சொன்னாலும் ஐயர் அது கிடக்கட்டும், நீர் செய்யும் எனச் சொல்கின்றனர். இப்பொழுது எமது கோவிலில் பல கலியாணம் நடைபெற்றன. இன்னமும் நடைபெற உள்ளன. இவை எல்லாம் பெரும் பணம் படைத்தவரின் திருமணங்களாகும்.

அடுத்து ஒலிபெருக்கி பாவனையில் நாம் அதை விரும்பவில்லை. இங்குள்ள இளைஞர்கள் விரும்பி அதனை வரப்பண்ணி ஒருநாள் முழுவதும் சினிமாப் பாட்டுப் போட்டது உங்களுக்குத் தெரியும். ஆனால் அந்த இளைஞர்கள் இன்று என்னுடன் பகை.

இந்த நிலைகளில் நான் என் செய்யலாம், நீங்கள் சிந்தியுங்கள் என தமது கவலையைத் தெரிவித்தார் குருக்கள் அவர்கள்.

எனவே எமது சமயத்தைக் கௌரவிக்க விரும்பினால் தயவுசெய்து நமது ஊர்மக்கள் கோவிலிற் கலியாணம் செய்வதையும் ஒலிபெருக்கி பாவிப்பதையும் நிறுத்திக்கொள்வது நலம்.

கோவிலில் கலியாணம் செய்வோர் தம்பிள்ளைகளில் அன்புடையவராக இருந்தால் அல்லது அறிவுடையோராயிருந்தால் பிறர் மனம்நோகும்படியான ஒரு [illegible] திருமணத்தில் [illegible] மன்றி திருவிழாக்காலங்களில் ஒலிபெருக்கி பாவியார்.

## வெள்ளிக்கிழமை விரதமும் வாரியார் தந்த இட்டலியும்

கொழும்பில் கந்தபுராணம் படித்துக் கொண்டிருக்கின்ற காலத்தில் ஒருநாள் தினகரன் பத்திராதிபரைச் சென்று காணும்படி நேர்ந்தது; அவர் முன்பு நமக்கு அறிமுகமானவர். அப்போது நான் அவருடன் கதைத்துக் கொண்டு இருக்கும் நேரத்தில் இன்னுமொருவரும் இருந்தார். அன்று ஒரு வெள்ளிக்கிழமை. அந்த நேரத்தில் அவரைக் காணும்படி கூடவந்தவர் ஏதோ வெள்ளிக்கிழமை விரதம் பற்றிய பேச்செடுத்தார்.

உடன் பத்திராதிபர் அவரை நோக்கி ''நானும் முந்தி வெள்ளிக்கிழமை விரதம் பிடித்தனான். காலையில் சாப்பிடுவதில்லை. அப்படி இருக்கும் நாளில் ஒரு வெள்ளிக்கிழமை கிருபானந்தவாரியாரைச் சந்திக்க வேண்டியிருந்தது. காலை 10 மணியிருக்கும். நான் போன நேரம் வாரியார் சாப்பிடக் குந்திவிட்டார். இட்டலி பரிமாறப்பட்டிருந்தது. என்னைக் கண்டதும் வாரியார் 'வாரும் நீரும் பக்கத்தில் இரும்' என்றார். நான் வாரியார் சொல்வதை மறுக்க முடியாது அருகில் சென்று அமர்ந்து அவருடன்கூடச் சாப்பிட்டேன்.

அன்று தொடக்கம் வெள்ளிக்கிழமை விரதம் பிடிப்பதில்லை' எனக் கூறிச் சிரித்தார். நாங்களும் கூடச் சிரித்தோம்.

## மடாதிபதியும் கைக்கடிகாரமும் சிவபூசையில் கரடிபுகுந்த கதைபோலாயிற்று!

சேக்கிழார் விழா கொழும்பில் நடந்துகொண்டு இருக்கின்ற காலத்தில் அவ்விடம் பேச்சிற்காக தருமபுர ஆதீனமுதல்வர் வந்திருந்தார். அவர் இராமகிருஷ்ண மிஷன் விடுதியில் தங்கி இருந்தார். நானும் அங்கு தங்கி இருந்தேன். அவர் சிவபூசை செய்ய நல்ல மலர்கள் கொய்துகொடுப்பது என் வழக்கம். அதனால் அவருடன் நெருங்கிப் பழகும் நிலை ஏற்பட்டது.

இப்படி விடுதியில் தங்கி இருந்த நாட்களில் ஒருநாள் ஆதீன முதல்வர் என்னை நோக்கி 'இங்கு நல்ல கைக்கடிகாரம் பெறமுடியும்' எனச் சொன்னார்கள். எனது நண்பராய் உள்ள முதலியார் ஒருவருக்கு ஒன்று தேவை. நான் வரும்போது ஒன்று வாங்கி வரும்படி என்னிடம் கூறியிருந்தார்கள். அப்படி ஒரு நல்ல கைக்கடிகாரம் ஒன்று பெற்றுத்தர முடியுமா அதற்கு வேண்டிய பணம் தருகிறேன் என்றார்.

நான் சொன்னேன் சுவாமி எனக்கு இந்தமாதிரியான விடயங்களில் அதிக பழக்கமில்லை. நானும் கைக்கடிகாரம் செருப்பு முதலிய விநோதப் பொருள்களை விரும்பாதவன். ஆகையால் உங்கள் விருப்பத்தை என்னால் பூர்த்திசெய்து கொடுக்க முடியாது என்றேன்.

### உங்களிடம் பத்து இநக்கிறதா? எனக் கேட்டார் ஆதீனம்!

இன்னுமொரு நாள் தருமபுர ஆதீன முதல்வர் என்னை நோக்கி நீங்கள் சைவர் என்கிறீர்கள். உங்கள் ஆறுமுகநாவலர் சைவமக்களுக்குப் பத்து இலட்சணம் வேண்டும் என்கிறார். ஆனால் உங்களிடம் குடுமி இல்லை. அதனாலே ஒன்று குறைச்சல். இதுவன்றிச் சில இலட்சணங்கள்தானே உங்களிடம் உண்டு. அப்பொழுது நீங்கள் உண்மை அடியாராக இருக்கலாமா? இந்தக் காலத்தில் 100க்கு 35 புள்ளி எடுத்தால் சோதனை பாஸ் என்று சொல்வார்கள். அதேபோல நீங்களும் சில இலட்சணங்களுடன் அடியார் சோதனையில் பாஸானவரோ எனக் கேட்டுச் சிரித்தார்.

நான் சொன்னேன் நீங்கள் சொல்கின்ற பத்து இலட்சணங்களும் வைத்துக்கட்டுவதில்லை. அது திருவருள் நிலையால் இயல்பில் பெருகுவதொன்றாகும். இதனைச் சுந்தரமூர்த்திசுவாமிகள் ''பத்து ஆகிய தொண்டர்பயில் பாலாவியின் கரைமேல்'' எனக் கூறுகின்றார். இதனை நீங்கள் ஏற்பீர்களோ எனக் கூறி மடாதிபதிப் பட்டம் வருவதுபோல் அடியார் இலக்கணம் செயற்கையன்று என்று கூறினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவக்கோவில்களில் பகைபெருகும் நிலைகண்டு

## பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் கவலைகொள்வதைக் கண்டுகொள்ளுங்கள்

சில நாட்களுக்குமுன் யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளராகக் கடமையாற்றும் ஒருவர் என்னிடம் வந்து உங்கள் சந்திரதீபத்தால் ஏதாகிலும் சைவநீதி தழைக்கும் அறிகுறி காணமுடியாதிருந்தால் நானும் எனது பிள்ளைகளும் நிச்சயமாக இஸ்லாமிய சமயத்தைச் சேர்வோம்! உண்மை! இருந்து பாருங்கள் என்ருர்!

ஏனெனில் இன்று அவர்கள்தான் தமது பெரியோரின் தரும உபதேசங்களின்படி இங்கு யாதும் வழுவாது ஒழுகிவருகிருர்கள்! அவர்கள் பள்ளிவாசலைப் பாருங்கள். எந்த ஒரு இடத்தில் ஏதாகிலும் ஒருபலக வஞ்சம் கொடுமை அடிபிடி இருக்கின்றதா? சமயத்தைப் பொறுத்தமட்டில் அவர்கள் மிகு கட்டுப்பாட்டுடன் நடக்கிருர்கள். அவர்கள் மத்தியில் தவறுகள் ஏற்பட்டுக் கட்சிப் பிரிவினை அல்லது பகைமுதல் தீங்குகள் ஏற்பட்டால் அப்படி ஒன்று உருவாகி முளைத்திடமுன்புஅவர்கள் மத்தியில் வாழும் பெரியவர்கள் தமது நேரத்தையும் சிரமத்தையும் பொருட்படுத்தாது உடன் எழுந்துசென்று தம் மக்கள் மத்தியில் எழும் பிரச்சனைகளைச் சுமுகமாகச் தீர்த்துவைக்கிருர்கள்!

ஆனுல் எங்கள் சைவக்கோயில்கள் கொலைக்களமாக வந்துள்ளது. கும்பிடப்போனவர் சுடுபட்டுக் கொலை. கும்பிட்டுக் கொண்டிருக்கும்போது சுடுபட்டுக்கொலை; அடி உதை எறி கற்பழிப்பு முதல் பல பழுதுகளும் சைவர்களது கோயில்களில் நடைபெறுகின்றன என்ருல் இப்படியான ஒருசமயத்தை நாம் இனியும் தழுவி நின்று ஏதாகிலும் ஒரு நன்மை ஆத்மீகத்துறையில் அடையலாமோ? இதற்கு நீங்கள் வகைசொல்ல வேண்டும் என்ருர்.

யாருடனும் பகையின்றி அன்புவழி நின்று சமய உண்மைகளைக் கூசாது எடுத்துக்கூறி மக்களை நல்வழிப்படுத்த முயலும் உங்கள் பத்திரிகையைத் தடைசெய்யச் சிவத்தமிழ்செல்வி தம்பிரான் சைவபரிபாலனசபை தமிழர் கூட்டணி இவர்கள் சார்பில் அரசாங்க அதிபரிடம் ஓர் தூதுகோஷ்டி அனுப்பி வைக்கப்பட்டது என்ருல் இனி இத்தகை சைவம் எமக்கு எதற்கு?

புலையும் கொலையும் வஞ்சனையும் பணமும் ஏமாற்றமுமா எமது சைவம்? இந்த ஒரு நிலையில் எமது சைவம் இருப்பதென்ருல் இதன் வழிநின்று நாம் என்ன பலனைத்தான் பெறப்போகின்ரும். உண்மையில் இன்று எமது சைவசமயம் கொலைக்கஞ்சாத புலையர் கூட்டத்தைச் சேர்ந்தாக வந்துவிட்டது. ஆகையினுல் அப்புலையர் கூட்டமே அந்தச் சைவசமயத்தைக் கடைப்பிடிக்கட்டும். நாம் இனிமேல் வேற்றுச் சமயங்களைத் தழுவி நின்ருகுதல் உண்மையைத் தெளிய முற்படுவோம். நீதித் தலங்களில் சென்று நீதி கேட்பதென்ருல் தனிப்பட்ட கோவில் எஜமானர்கள் ஆகியோர் சைவநீதிக்கு முரணுன சட்டங்கள்மூலம் கோயிலில் பூசையின்றி மக்கள்சென்று வழிபாடாற்ற முடியாதவிதமாகப் பூட்டிவைக்கிருர்கள். இன்று இப்படிப் பல கோவில்கள் பூட்டப்பட்டு வருகின்றன.

சைவநீதிகளின்படி நீங்கள் ஏன் கருமமாற்ருது தட்டிக்கழிக்கின்றீர்கள் என்று எந்த ஒருகோவிலில் ஆகுதல் கோவில் எஜமானையாகுதல் கேட்கமுடியாத ஒரு நிலையை இன்று சைவசமயம் கடைப்பிடித்து வருகிறதென்ருல் நாம் நினைத்தபடி செய்வோம்; நீங்கள் பேசமுடியாது என்று எஜமானர்கள் எம்மை ஏளனம்செய்கிருர்கள்; இப்படியான ஒருநிலை எப்போது எமது சமயத்தைவிட்டு நீங்கப்போகிறதோ தெரியவில்லை;

நாங்கள் என்னசெய்யலாம். எங்கள் சைவசமயத்தை அனுட்டிக்கும் மக்கள் மத்தியில் நல்லுணர்வுகள் அற்றுப்போய்விட்டன. செய்யவேண்டியது யாது? செய்யவேண்டாதது யாது? என்று பகுத்து உணரமுடியாதநிலையில் இன்று எமது சைவமக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள்.

தமது அரசியல் செல்வாக்கிற்காக கோயிலில் கூசசமின்றி எதையும் செய்துவிடமுடியும் என்று அரசியல்வாதிகள் எமது சைவ இளைஞர்களைப் பிழையான வழியில் தூண்டி தர்ம நெறிகளுக்கு அஞ்சாது தீமைசெய்யக் கூசாத ஒருநிலையை ஏற்படுத்திவிட்டார்கள், இந்த நிலையில் எமது தமிழர்கூட்டணி மிகவும் முன்னேற்றம் கண்டுள்ளதாகக் காணப்படுகிறது. தமிழர்விடுதலைப் போராட்டத்தில் பின்னேற்றம் ஆனுலும் கோயில்களில் சைவநீதிகள் சீலங்கள் அழியும்வகையில் மக்களைத் தூண்டிவிட்டுப் பெருவெற்றி கண்டுள்ளார்கள் என்பது கவலையைத் தரும் ஒன்ருகும்.

கோவில்பேரில் மக்கள் பகையைப் பெருக்கக்கூடிய அளவிற்குப் பொதுவாக எல்லா அரசியற்கட்சிகளுமே முன்நின்று உழைக்கின்றன. தமக்கு ஒரு செல்வாக்கு வேண்டின் பிறமதத்தவரைக் கோவில் முன்றலில்வைத்து அவருக்கு மாலை அணிவித்துக் காளாஞ்சிகொடுத்துக் கௌரவிக்கும் செயல் ஒரு நாய்தானும் செய்யமாட்டாத செயலாகும். அப்படியான செயல் எமது சைவமக்களிடையே காணக்கூடியதாக இருக்கிறது. நாயானது தேங்காய்ப்பாதியை எடுக்கும் ஆசையில் கோயில் நுழைவாயிலில் வந்தது கண்டால் 'அடி' என்று துரத்தும் எமது சைவமக்கள் தன்னலத்தின் பொருட்டு எமது சைவமதத்துக்குச் சார்பில்லாத மக்களை அழைத்துவந்து கௌரவிப்பதென்ருல் நாயிலும் பார்க்க இச்செயலைப் புரியும் சைவமக்கள் கடைப்பட்டவராகவே கருதப்படுவார்.

எல்லார்கரும் ஒரேகடவுள். ஆனுல் எங்களுடைய சைவசமயப் பெரியோர் கடவுளை ஆதரித்துப் பேண முற்றிலும் திருவருள் வசப்பட்டு யாருடனும் பகையின்றி உறவின்றி அயலவர்க்குத் துயரின்றி உயர்ந்த சீலங்களுடன் ஒழுகிவழிபடக் கோயில்களை அமைத்தார்கள். ஆனுல் இன்று அந்தக் கோயில்கள் ஒரு குறிப்பிட்டவர்களின் சொத்தாகவும் தனிப்பட்டவரின் சொத்தாகவும் எப்படி வந்துளது? இது எமக்கு விளங்கமுடியாதிருக்கிறது.

இப்படிச் சொல்லி பின்னரும் விரிவுரையாளர் தொடர்ந்து சொன்னுர். ஒரு கோவிலுக்கு எஜமான் என்ருல் அது கடவுள்தான். அவர் அல்லாது எஜமான் அங்கு யாரும் இருக்கமுடியாது. அவர் வகுத்த அறங்களுண்டு. அந்த அறத்தின்வழி எல்லா மக்களும் சென்ருெழுகினுல் கோயிலில் யாருமே எஜமானர்களாக இருக்கவேண்டியதில்லை. அறத்தினை உணர்ந்தவர், உணராதவர்க்கு எடுத்துப் போதித்து அறத்தின்வழி மக்களை உணரவைத்தலன்றி வேறு செயல்கள் கோயில் பேரில் நிகழவேண்டியதில்லை என்ருர்.

அவ்வேளை நான் சொன்னேன்: நாயன்மார் பாடியருளிய திருப்பதிகங்களை நன்ருக ஓதியுணர்ந்து அதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கையை அல்லது அவர்கள் வழிபாடுசெய்து வந்த கோவிலில் இருந்துவந்த நிலைமைகளை நாம் எடுத்துக்கொண்டால் எந்த ஒரு கோவிலிலாகுதல் எஜமானி என்ற முறையில் ஒருவர் இருந்ததாகக் காணமுடியவில்லை. கோவில் பேரால் வழிபடுவோர் தாம் வழிபாடு செய்வதற்காக ஆயமாக ஒரு சதமேனும் கொடுக்கவில்லை. யாரும் எந்தக்கோவிலிலும் தாம் விரும்பியவாறு திருப்பணி செய்து விரும்பியபடி அழதுபடைத்து இறைவனை வழிபட்டு வருவதற்கு அல்லது தொண்டுசெய்து வருவதற்குச் சர்வசுதந்திரமும் இருந்ததாக அறியமுடிகிறது.

நாயன்மார் காலத்தில் என்ன நடந்தது என்பதைப் பார்போம்; வேதாரணியத்து திருநாவுக்கரசரும் சம்பந்தரும் சென்றபோது கோயில் கதவம் பூட்டப்பட்டிருந்தது. அவர்கள் அங்கு சென்று பாடல் மூலம் பூட்டிய கதவைத்திறந்து உட்சென்று வழிப்பட்டனர். இதுவன்றி நமிநந்திநாயனுர் பூட்டியிருந்த கோவலின் கதவைத் திறந்து தாம் உட்சென்று விளக்கேற்றி வழிபட்டு வருவதற்கு அரசாங்கமோ அன்றி நிர்வாகமோ தடைவிதித்ததாகத் தெரியவில்லை. இதை நீங்கள் அவர்கள் பதிகங்களை நன்ருக ஆராய்ந்து பார்த்துத் தெளிந்துகொள்ளலாம் என்றேன்.

அப்போது விரிவுரையாளர் நாயன்மார் காலத்தில் எவருமே கோவிலைத் தமது உரிமையாக அல்லது சந்ததி வழி உரிமையாகப் பாராட்டவில்லை என்று சொன்னுர்.

அது சரி கோவில்பேரில் எவராகுதல் வருவாய்பெற்றுச் சீவிப்பதில்லை. எஜமானன் என்ற ஒரு அநீதியான பீடையான நிலை இலங்கையில் ஒல்லாந்தர் வருகைக்குப் பின்னர்தான் யாழ்ப்பாணத்துக்கு வந்தது. ஒல்லாந்தருக்கு உணவுக்காக மாடுகொடுத்து தோம்பு எழுதிவைத்து அதன் மூலமாக இது எங்கள் கோவிலெனக் கொண்டுவந்தவர்களின் வழிவந்தோர்தான் இன்றைய எஜமானர்களும் நிர்வாகிகளுமாவார்கள். ஒரு கோவிலை ஒருவர் ஓரிடத்தில் அமைத்துவிட்டுத் தான்தான் அக்கோவிலின் எஜமான் என்று கூறுவாராகில் அக்கோவில் கட்டிய புண்ணியத்தைக் கூட இழந்துவிடுவார். உண்மையை விளங்கிக்கொண்டால் ஒருவர் அக்கோவிலை வழிபடச் செலுமிடத்து கோயிலை உண்டாக்கியவர் வழிபடுபவருக்கு ஆதரவாக இருப்பதைவிட்டு நீ அங்குநில் நீ இங்குநில் என்று சொன்னுல் அதைக் கடவுள் இருப்பிடம் என்று சொல்லிக்கொள்வதில் ஏதும் அர்த்தமில்லை. அப்படியாக அவர் தன்னை அதிகாரமிடும் ஒரு முதலாளியாக நினைந்து கோயிலைக் கட்டி வழிபடுவாரை ஆட்படுத்தி அதிகாரம் செய்தால் அதிலும்பார்க்க ஒருதொழிற்சாலையைக் கட்டி நடத்துவதே நல்லதன்றி கோவிலில் கட்டுதல் நன்மையற்றது. கோவிலில் வழிபடுவோரைக் கட்டுப்படுத்துதல் நீதிமான்களுக்கோ நீதிஸ்தலங்களுக்கோ நியாயமற்றது. அல்லது கோயிலில் சென்று வழிபடும் மக்களைக் கட்டுப்படுத்துவதற்கு எந்தவகையான நீதிக்குமோ அரசாங்கத்திற்குமோ அல்லது நீதிஸ்தலங்களுக்குமோ உரிமையில்லை என்ருர்,

அதற்கு நான் பெரியபுராண வரலாறுகளை எடுத்துக்கொண்டால் நீங்கள் சொன்னவைகள் அத்தனையையும் அதிற் கண்டுகொள்ளலாம் என்று சொன்னேன். கோயிலை வழிபடச் சொல்வோரை அல்லது கோவில் தொண்டுசெய்வார்க்குத் தீங்கு செய்வாரை அன்றிருந்த அரசர்கள் அவ்வாறு செய்யாதபடி பாதுகாத்துவந்தார்கள். ஆனுல் எக்காரணம்கொண்டும் ஒருகோவிலை ஒருவர் தனிஉரிமை பாராட்டவில்லை; இதை நன்ருகப் பெரியபுராணத்திலுள்ள பாட்டுக்கள் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.

சுந்தரமுர்த்திசுவாமிகள் தாம் பாடியருளிய தேவாரமொன்றில் பரசுராமர் என்பவர் முந்நூறு பிராமணக் குடும்பங்களைக் கோவிலைப் பூசித்து பணிசெய்யக் கொடுத்தாரென்கிருர். எனவே பூசை உரிமையோ தனிப்பட்ட உரிமையோ அங்கு இருந்திருக்குமா? ஆகையினுலே கோயிலென்பது அன்பு பாராட்டற்குரிய இடமாகும். இது இன்று சிலரின் அதிகாரத்தை நிலைநாட்டக் கூடிய இடமாக இருப்பது கவலைக்குரியதாகுமென்றேன். விரிவுரையாளரும் சரிதான் நமது சைவத்தில் அதர்மம்கூடிவிட்டது, தர்மநிலையங்களெல்லாம் அதர்மர்களின் குகையாக மாறிவிட்டது. இது எப்போது தீரும் என்பதற்குத் திருவருள்தான் வழிகாண வேண்டுமென்ருர்.

சைவமக்களே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளரின் மனக் கருத்தை இப்பத்திரிகை மூலமாக உங்கட்கு தெரிவிக்கிறேன்.

எமது கோவில் ஒரு புனிதமான இடம் அங்கு சென்று எவரும் ஆதிக்கம் செலுத்தவோ அல்லது யார் மீதும் பகை பாராட்டவோ முடியாத இடம். நாம் எல்லோரும் கடவுளின் குழந்தைகள் என்று ஏகப்பட்ட சிந்தையின் அந்நன்மைப்பாட்டை வளத்தற்குரிய இடமாக வைப்பதற்கு இங்கு தரப்பட்ட திருநாவுக்கரசர் பெருமானது வாக்கை நன்ருக உணர்ந்து தாழ்வுற்ற எமது சமயத்தின் மேம்பாட்டிக்கு உதவ வேண்டுகிறேன்.

வீட்டிலுள்ள பகையிலும் பார்க்க கோயிலினுல் பெருகிக்கொள்ளும் பகை நாட்டிற்கும் நம் இனத்திற்கும் கேடு விளைவிக்குமெனக் கூறவிரும்புகிறேன். ஆகவே தமிழினத்தின் மேம்பாட்டை விரும்புவீராகில் கோயிலில் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். அன்றி கோயில் பேரில் நீதித்தலம் சென்று வழக்காடுவதைத் தவிர்த்துக்கொள்.

## எமது சமயம் என்ருல் இதுவா? [தாமரைத் தீவான்]

உள்ளமா சமயம்அன்றி உடல்உடை மட்டுந்தானு?
உள்ளதா சமயம் சும்மா உளறலா புளுகாபொய்யா?
மெள்ளவே பாடாநிற்கும் மெல்லிசை மட்டுந்தானு?
அள்ளியே பூசும்நீறும் ஆரத உணவுந்தானு? 1

நல்மனம் இல்லாவிட்டால் நடத்தைகள் இல்லாவிட்டால்
சொல்வதைச் செய்யாவிட்டால் தூயநோக்கில்லாவிட்டால்
பல்வகைப் பேச்சும்பூச்சும் பாடலும்பணியும் ஈற்றில்
வெல்லுமோ இறைவன்தன்னுல் விரும்பிடும் சமயமாமோ? 2

நெஞ்சது தூய்மையானுல் நிகழுமோ சூது சூழ்ச்சி
வஞ்சகம் களவு வெம்போர்வழிப்பறி கொலைகள் எல்லாம்
நஞ்சுகள் பொருமைப்போக்கு நாடகம்நடிப்பு போர்வை
கொஞ்சமா? கடவுள்காக்க கூறும்வாய் சமயக்கொள்கை! 3

தெருவிலே முள்ளும்கல்லும் திரிபவர் கடந்தேபோவார்!
கருவிலே அமைந்தால்அன்ருே கண்டதை அகற்றிப்போவார்
உருவிலே சமயம்காண்போம்! உளத்திலே உணர்வைக்காணேம்!
குருவெனத் தம்மைக்காட்டிக் கொள்ளுவார் கொள்ளுவோமா? 4

[illegible]யென்ன? கடவுளைச் சமயந்தன்னை
வி[illegible]ஓடவல்ல வேடதாரிகளு முண்டு!
முற்றுமே அறிந்திடாமல் முழுப்பொய்யை உண்மைஎன்ருல்
சற்றுமே சரிவாரது! சமயத்துற் குளமேதேவை! 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைமூட்டை தோளில் அணிந்த குள்ளச்சாமியும் பகவான் பாரதியாரும்

## வண்ணன் தொழில்பற்றிய மேன்மை உணர்த்திய குப்பைச்சாமி

ஒருநாள் யோகசுவாமியிடம் சென்றேன், என்னைக் கண்டதும் சுவாமி பாரதியாரின் கவிகளில் ஒன்றான ''தீராத விளையாட்டுப்பிள்ளை'' எனத் தொடங்கும் பாடலைப்பாடி முடித்து என்னைநோக்கி ''என்றூர் காணும் பகவான் பாரதியார்'' எனக் கூறிப் பின்னரும் நீரும் ஒரு விளையாட்டுப்பிள்ளை தானே வரும் என்றூர்.

எனக்குச் சுவாமி சொல்லிய வார்த்தை திடுக்கிடச் செய்தது. என்னை விளையாட்டுப்பிள்ளை எனக் கூறியது அல்ல; ஆனல் பாரதியாரைப் பகவான் என்றூரே! பாரதியார் அவ்வளவு பெரியவரோ? எங்கள் யாழ்ப்பாணத்தில் அவரை ஓர் கவிதைக்குச் சிறந்தவர் என்பதன்றி சுவாமி பகவானென்று ஆத்மீகத்துறையில் பெரியவராகக் கருதுவதில்லை. நானும் அப்படியே நினைத்தேன். ஆகையால் சுவாமியின் வாக்குப் பிழையாகாதெனவெண்ணி பாரதியாரின் ஆன்ம நலத்தை அவர் கவிதைமூலம் காண முயன்றேன். உண்மையின் அன்புருவாசவே அவரது பாடல் கதைகள் மூலம் அவரைக் காணமுடிந்தது.

ஆதலால் இம்முறை பாரதியார் எழுதிய கதை ஒன்று கீழே காணப்படுகின்றது. அதனை நீங்கள் வாசித்து எத்துணைப் பெரியவர் நமது நீறு அணிந்த மக்களென்பதைக் காணுங்கள்.

வேதபுரத்தில் குள்ளச்சாமி என்ெருரு பரதேசியிருக்கிறூர். அவருக்கு வயது ஐம்பதோ; அறுபதோ, எழுபதோ, எண்பதோ யாருக்கும் தெரியாது, அவருடைய உயரம் நாலரை அடியிருக்கும். கருநிறம். குண்டுசட்டியைப்போல முகம். உடம்பெல்லாம் வயிரக்கட்டைபோலே நல்ல உறுதியான பெயர்வழி,

அவருக்கு வியாதியென்பதே கிடையாது. சென்ற பத்துவருஷங்களில் ஒரேதடவை அவர்மேலே கொஞ்சம் சொறி சிரங்கு வந்தது. பத்துநாளிருந்து நீங்கிவிட்டது, அந்த மனுஷ்யன் ஜடபரதருடைய நிலைமையிலேயிருப்பதாகச் சொல்லலாம். பேசினல் பயித்தியக்காரன் பேசுவதுபோலிருக்கும். இழுத்திழுத்துத் திக்கித்திக்கி முன்பின் சம்பந்தமில்லாமல் விழுங்கி விழுங்கிப் பேசுவார். தெருவிலே படுத்துக்கிடப்பார், பசித்த போது எங்கேனும்போய்ப் பிச்சை வாங்கிச் சாப்பிடுவார். கள்குடிப்பார். கஞ்சாத் தின்பார். மண்ணிலே புரளுவார். நாய்களுடன் சண்டை போடுவார்.

வீதியிலே பெண்பிள்ளைகளுக்கெல்லாம் அவரைக் கண்டால் இரக்கமுண்டாகும், திடீரென்று ஒரு வீட்டுக்குள் நுழைந்து, அந்த வீட்டிலிருக்கும் குழந்தைகள் நெற்றியிலே திருநீற்றைப் பூசிவிட்டு ஓடிப்போவார். யாராவது திட்டினலும், அடித்தாலும் பொறுத்துக்கொண்டு உடனே அவ்விடத்தைவிட்டு ஓடிப்போய்விடுவார்.

சாமானிய ஜனங்கள் அவருக்கு நூறுவயதுக்கு மேலே ஆகிவிட்டதென்றும், நெடுங்காலமாக இப்போதிருப்பதுபோலவே, நாற்பதைம்பது வயதுபோலேதான் இருக்கிறூரென்றும் சொல்லுகிறூர்கள்; ஆனல் இந்த வார்த்தை எவ்வளவுதூரம் நிச்சயமென்பதை நிர்ணயிக்க இடமில்லை.

அவர் கையால் விபூதிவாங்கிப் பூசிக்கொண்டால் நோய்தீர்ந்துவிடுமென்று நம்பிக்கையும் பலர்கொண்டிருக்கிறூர்கள்,

மேற்படி குள்ளச்சாமியார் ஒரு நாள் தாம் வீதியில் நடந்துவரும்போது, முதுகின்மேலே கிழிந்த பழங்கந்தைகளையெல்லாம் ஒரு பெரிய அழுக்குமூட்டை கட்டிச் சுமந்து கொண்டுவந்தார். இந்தச் சாமியாரைக் கண்டால் நான் கும்பிடுவது வழக்கம்; அப்படியே கும்பிட்டேன். ஈயென்று பல்லைக்காட்டிப் பேதைச் சிரிப்புச் சிரித்தார், கண்ணைப் பார்த்தால் குறும்பு கூத்தாடுகிறது.

''ஏ சாமி, உனக்கென்ன பயித்தியமா? கந்தைகளைக் கட்டி ஏன் முதுகிலே சுமக்கிறூய்?'' என்று கேட்டேன்.

''நீ நெஞ்சுக்குள்ளே சுமக்கிறூய், நான் முதுகின்மேலே சுமக்கிறேன்'' என்று சொல்லி ஓடிப்போய்விட்டார். உடனே நான் பொருள் தெரிந்து கொண்டேன்; அஞ்ஞானப் பழங் குப்பைகளையும், பழங்கவலைகளையும், பழந் துன்பங்களையும், பழஞ் சிறுமைகளையும் மனதில் வீணய்ச் சுமந்து திரியும் சாமான்ய மனிதனுடைய அறிவீனத்தை விளக்கும்பொருட்டு சாமியார் இந்தத் திருஷ்டாந்தத்தைச் சொன்னூரென்று தெரிந்து கொண்டேன்.

பின்ெருருநாள் அவரிடம் பரிகாசமாக நான் ''சாமி, இப்படிப் பிச்சை வாங்கித் தண்டச்சோறு தின்று கொண்டு ஜீவனம் பண்ணுகிறூயே. ஏதேனும் தொழில்செய்து பிழைக்கக் கூடாதா?'' என்று கேட்டேன். அந்தப் பரதேசி சொல்லுகிறூர்;

''தம்பி; நானும் தொழில்செய்துதான் சீவிக்கிறேன், எனக்கு வண்ணன்வேலை. ஐம்புலன்களாகிய கழுதைகளை மேய்க்கிறேன. அந்தக்கரணமான துணிமூட்டைகளை வெளுக்கிறேன்'' என்றூர்.

ஆம் பரிசுத்தப்படுத்துகிறவனே ஆசாரியன். அவனுடைய சொல்லை மற்றவர் ஆதரிக்கவேண்டும். மேலே சாமியாருடைய புறநடைகள் குடும்பம் நடத்தும் கிருஹஸ்தர்களுக்குத் தகுதியல்ல, ஆனல அவருடைய உள்ள நடையை உலகத்தார் பின்பற்றவேண்டும். ஐம்புலன்களாகிய கழுதைகளை மீறிச் செல்லாதபடி கட்டுப்படுத்தி ஆளவேண்டும்' உள்ளத்தை மாசில்லாதபடி சுத்தமாகச் செய்துகொள்ளவேண்டும்.

அழுக்குத் தீர்க்கும் தொழிலசெய்வோர நமது தேசத்தில் மாகாணத்துக்கு இலக்ஷம்பேர் வேண்டும். ஹிந்துக்கள் தற்காலத்தில் குப்பைகுள முழுகிப்போய்க் கிடக்கிறூர்கள். வீட்டையும், தெருவையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவில்லை. ஐலதாரைகளையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவல்லை. கிணறுகளையும், குளங்களையும், சுனைகளையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவில்லை. கோயிற் குளங்களில் ஜலம் புழுத்து நெளிகிறது. நாற்றம் குடலைப் பிடுங்குகிறது.

மனுஷ்யாபிவிருத்தியாவது யாது?

புழுதியை நீக்கித் தரையைச் சுத்தமாக்குதல். அழுக்குப்போகத் துணியையும், நாற்றமில்லாதபடி குளத்தையும், பொதுவாக எல்லா விஷயங்களையும் சுத்தமாக்கி வைத்துக்கொள்ளுதல்.

நான் மேற்படி சாமியாரிடம், ''சாமியாரே, ஞான நெறியிலே செல்ல விரும்புவோன் முக்கியமாக எதை ஆரம்பத் தொழிலாகக்கொள்ள வேண்டும்?'' என்று கேட்டேன்.

குள்ளச்சாமி சொல்கிறூர்:

''முதலாவது, நாக்கை வெளுக்க வேண்டும். பொய் சொல்லக்கூடாது. முகஸ்துதி கூடாது. தற்புகழ்ச்சி கூடாது. வருந்தா சொல்லல் ஆகாது, பயந்து பேசக்கூடாது. இதுவே வண்ணன் தொழில் ஆரம்பம். பிறகு அந்தக்கரணத்தை வெளுத்தல் சுலபம். சில இடங்களில் பொய்சொலித் தீரும்படியாக இருந்தால், அப்போது மௌனத்தைக் கொள்ள வேண்டும். மௌனம் சர்வார்த்த சாதகம். அதைவிட்டுப் பேசும்படி நேர்ந்தால் உண்மையே சொல்ல வேண்டும். உண்மை விரதம் தவறக் கூடாது. தவறவேண்டிய அவசியமில்லை; உண்மை கூறினல் தீங்கு நேரிடுமென்று நினைப்போர் தெய்வம் உண்மையென்பதை அறியமாட்டார்கள். தெய்வம் உண்மை. அதன் இஷ்டப்படி உலகம் நடக்கிறது. ஆதலால் பயப்படுகிறவன் மூடசிகாமணி. அந்தக்கரணத்தை வெளுத்தலாவது அதிலுள்ள பயத்தை நீக்குதல். அந்தக் கரணத்தை சுத்திசெய்துவிட்டால் விடுதலையுண்டாகும் என்றூர்.

பின்னுமொரு சமயம் மேற்படி குள்ளச்சாமி என்னிடம் வந்து, ''தம்பி நீ இலக்கணகாரனுச்சுதே! 'வண்ணன்' என்ற வார்த்தையை உடைத்துப் பொருள் சொல்லுவாயா?'' என்று கேட்டார்.

நான் நகைத்து; சாமி, உடைக்கிற இலக்கணம் எனக்குத் தெரியாது'' என்றேன்.

அப்போது குள்ளச்சாமி சொல்லுகிறூர்: ''வண்—ஆன்; வண்ணன்;

ஆன் என்பது ரிஷபம். வள்ளலாகிய ரிஷபம் நந்திகேசுரர். அவருடைய தொழில் சுத்தஞான மூர்த்தியாகிய சிவனைச் சுமந்துகொண்டிருத்தல். தமிழ்நாட்டு ஞானசாரியர்களுக்கு ஆதிமூர்த்தியும் வள்ளலுமாகி நிற்கும் இந்த நந்திபகவானுடைய தொழிலாகிய ஆசாரியத் தொழிலையே நான் வண்ணன் தொழிலென்று சொல்லுகிறேன். எனக்கு வண்ணன் தொழில்'' என்று மேற்படி குள்ளச்சாமி சொன்னூர்.

# நவாலி அட்டகிரி கந்தசுவாமிகோவிலில் தர்மம் கொலைசெய்யப்பட்டுவிட்டது !!

## இதற்கு மூலகாரணம் பிராமணப் பகைமையே !!

தனது எதிராளிகள் யாரும் தனது கோவிலில் கும்பிட வரமுடியாதபடி ஓர் சட்டமன்ற உத்தரவைப்பெற்று நவாலி அட்டகிரிக் கந்தசாமிக்கோவிலில் எஜமான் என்பவர் கும்பிடச் செல்வார் தொண்டு புரிவார் யாவரும் கோவில் எல்லைக்குள் கால்வையாதபடி செய்துள்ளார். இச்செயல் எங்கள் சைவநெறியில் தருமத்தை கொலை செய்ததாகவே கருதப்பட வேண்டியது !

கோயில் கும்பிடச் செல்வாரை தடை செய்வதற்கு எந்த சட்டத்திற்கும் அதிகாரமில்லை. கோயில் என்றூல் அது ஒருதனிப்பட்டவரின் சொத்தல்ல. அல்லது ஒரு குறிப்பிட்ட நிர்வாகிகளின் சொத்துமல்ல. அது அதனை வணங்கிடும் தொண்டு செய்யும் இரண்டு காலும் இரண்டு கையும் படைத்த அத்தனை மக்களின் சொத்தாகும் என்பது உலகம் தோன்றிய காலம் தொட்டு நிகழ்ந்து வரும் மரபாகும்.

ஒரு கோவில் என்பது ஓர் பாடசாலையல்ல அல்லது தொழிசாலையல்ல அல்லது வீடு அல்ல அல்லது காணி அல்ல ! இப்படியான நிலையில் உள்ள நிலயங்களைப்பற்றியதில் நாம் உரிமை பாராட்டலாம் ! ஆனல் அதனில் கூடபகை பெருக்குவது நாட்டில் தமிழ் இனத்திற்கு ஓர் தீங்கினை வருவிக்கும் !

அப்படி நிலைஇருப்ப அதற்கு மேலாக எல்லார்க்கும் ஈசனுக இருக்கும் கடவுள் இருப்பிடத்தில் நாம் பகை பெருக்குவதென்றூல் இதற்கு நாம் என் செய்யலாம் எனநினைக்கலாம். இந்தளவு செயலில் நமது சமய அறிவு கடவுள் பக்தி கடவுள் மதிப்பு அத்தனையும் அடியோடு அழிந்துள்ளதே.

இந்த நிலையில் கோயிலே பகையின் உச்சநிலையில் வருவிப்பதற்குக் காரணமாக அதன் தெற்குவீதியில் உள்ள இரண்டு பிராமணக் குடும்பமுமே காலாகியது என்பது பொதுவாக எல்லார்க்கும் விளங்குகிறது. இரு பிராமணக் குடும்பமும் நீண்டகாலமாகத் தாம் வளர்த்து வந்த உட்பகை கோயிலில் வெளிப்பகையாக மாறி எஜமானிடத்தில் மிருகத்தனத்தை பெருக்கி கடவுள் இருப்பிடத்தை தேனீர்க்கடைபோல் ஆக்கிவிட்டது.

இதற்காகவே நாம் பல பல முறையும் சென்ற மூன்று ஆண்டுகளாக இன்றைய பிராமணர்கள் சொந்த நலத்திற்காக நயத்திற்காக கோயில் எங்கும் தமது அடம் பிடித்த கொள்கையை நிலைபெறச்செய்ய பெரு முயற்சி எடுத்தனர். எத்தனை பொய்யைச் சொல்லியும் மக்களைத் தூண்டி ஈற்றில் சட்டமன்றம் சென்று தமது பிடியை வலுவாக்க முயல்கின்றனர் எனக் கூறிவந்தோம்.

கோயில் என்பது எவர்க்கும் ஓர் வருவாயைத் தேடித்தரும் இடமாகக் கருதமுடியாது. ஒருவரது வருவாயைப் பெறும் இடத்தில் பிறர் தலையிட்டால்தான் அது தவருகக் கருதப்படல் வேண்டும். ஆனல் ஒருவர் ஓர் தருமத்தை பொதுவாகச் செய்யும்போது அதில் சென்று பிறரும் அத்தருமத்தைத் தமது தூய திருப்பணிமூலம் சிறப்படையச் செய்யும்போது அதை நீ செய்யக்கூடாது எனத் தடுத்தால் அப்படித் தடுப்பவருடைய செயலைத் தருமம் என்றும் அது ஓர் பொது இடம் என்றும் அல்லது மதிப்பிற்குரிய இடமென்றும் கருதமுடியாது.

எமது தமிழ்நாட்டில் முன்புள்ள பெரியோர் ஒரு கோயிலைத் தாபித்தால் பின்னர் தாம் ஒரு போதும் அதில் உரிமைபாராட்ட மாட்டார் ஒருவர் ஒரு கோயிலைத் தாபிப்பது பிறரும வழிபட்டு நல் நிலையை அடையட்டும் என்பது நோக்கமாகும். இதை பொது அறிவில் தெளியலாம். கோட்செங்கட் சோழ அரசர் எத்தனையோ கோவில் கட்டினர் ஆனல் எதனிலும் தனக்கு உரிமையாக உயில் எழுதிவைக்கவும் இல்லை அல்லது பூசை உரித்து காளஞ்சி கரிப்பொட்டு எஜமான் என்ற கோட்பாட்டில் வைத்திடவில்லை.

இப்படியாக இன்று பூசை உரிமை பாராட்டும் பிராமணர்களும் எஜமானர்களும் எமது சைவநெறிக்குச் செய்த அநியாயம்போல்வேறு எந்தச் சமயத்திலும் செய்யவில்லை.

எய்தவன் இருப்ப அம்பை நாம் நோவதால் பயனில்லை ஆதலினலே நோய்க்கு மூலகாரணமாக பகையை உணர்ந்து ஊரில் உள்ள பெரு மக்கள் அனைவரும் திரண்டு ஓர் சமதானத்தை ஏற்படுத்த முயல வேண்டும்.

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கில் வசிக்கும் திரு. வை. நல்லையா அவர்களால் தமது சந்திரதீப அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வருட சந்தா ரூபா 40–00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org